பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | தை 09 | செவ்வாய்க்கிழமை 22.01.2019 | கதிர் 78

## இனி இது ரகசியம் அல்ல!

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விஜேராம இல்லத்தில் அண்மையில் நடந்த சம்பவம் இது. சுவாரஸியமான விடயம் என்பதால் வாசகர்களோடு பகிர்ந்து கொள்வது பொருத்தமானது என்று கருதுகின்றேன்.

நடந்த முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் மஹிந்த பக்கம் 02 »

# இலங்கை ராணுவ பிரிகேடியருக்கு பிரிட்டன் நீதிமன்றம் பிடியாணை!

## லண்டனில் தமிழர்களுக்கு கழுத்தறுப்பு சைகை காட்டி அச்சுறுத்தியமைக்காக



லண்டன், ஜனவரி 22

பிரிட்டனுக்கான இலங்கைத் தூதரகத்தின் முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோவை கைது செய்வதற்கான பிடியாணை உத்தரவை லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் நீதிவான் நீதிமன்று நேற்று வழங்கியது. பக்கம் 11 »

## புலிகளை ஒடுக்கப் பிரிட்டனின் உதவி; 400 கோப்புகள் இரகசியமாக அழிப்பு!

லண்டன், ஜன. 22

இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கம் எழுச்சி பெற்ற ஆரம்ப காலகட்டத்தில் இருந்து பேணப்பட்டு வந்த 400 இராஜதந்திர கோப்புகளை அழித்திருப்பதாக பிரிட்டன் வெளிவிவகாரப் பணியகம் ஒப்புக்கொண்டுள்ளது.

இதன் மூலம், பிரித்தானிய வெளிவிவகாரப் பணியகம் வரலாற்றைச் சிதைத்துள்ளதாக, லண்டனில் இருந்து வெளி பக்கம் 11 »

## 1240 ஏக்கர் காணிகளை விடுவித்தார் ஜனாதிபதி



முல்லைத்தீவு, ஜன. 22

முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் படையினர் வசமிருந்த பக்கம் 11 »

## எம்மை ஏன் கைவிட்டீர்கள்?

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கண்ணீர் மல்க ஜனாதிபதியிடம் கேள்வி



கிளிநொச்சி, ஜன. 22

'எம்மை ஏன் கைவிட்டீர்கள்' என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கேள்வி எழுப்பி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பக்கம் 11 »

## இன்று கூடுகிறது அமைச்சரவை அதிரடி காட்டுவார் ஜனாதிபதி

கொழும்பு, ஜன. 22

நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் வாராந்த அமைச்சரவைக் கூட்டம் பக்கம் 02 »

## வலி. வடக்கில் மக்களை ஏமாற்றிய இராணுவம்

### காணிகள் விடுவிக்கப்படும் என காத்திருந்துவிட்டு வீடு சென்றனர்



யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ்ப்பாணத்தில் இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணிகள் நேற்று விடுவிக்கப்படும் பக்கம் 02 »

## போதை வர்த்தகத்தில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனையில் மாற்றமில்லை

### முல்லைத்தீவில் அறிவித்தார் ஜனாதிபதி



முல்லைத்தீவு, ஜன. 22

சட்டவிரோத போதைப் பொருள் ஒழிப்புக்கு எதிராகக் கடந்த நான்கரை வருடத்துக்குள் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் எதிர்வரும் வாரங்களில் புதிய தோற்றத்துடன் செயற்படுத்தப்படுமென ஜனாதிபதி மைத் பக்கம் 11 »

## பொதுவேட்பாளராக போட்டியிடத் தயார்!

### அத்தநாயக்கவுக்கும் வந்தது ஆசை

கொழும்பு, ஜன. 22

ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராகப் போட்டியிட அழைப்பு விடுக்கப்பட்டால் அதனை ஏற்றுக் பக்கம் 02 »

## தமிழரைத் தொடர்ந்தும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காகவே புதிய அரசமைப்பு!

### விக்னேஸ்வரனின் கணிப்பு இது

யாழ்ப்பாணம், ஜன. 22

சிங்கள ஏகாதிபத்தியத்தைக் காப்பாற்றி தமிழ் மக்களைத் தொடர்ந்து தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க என்ன செய்யலாம் என்பதே அவர்கள் குறிக்கோள். புதிய அரசியலமைப்பு அதற்கான கண்டுபிடிப்பு இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் பக்கம் 11 »

## மைத்திரியின் பாதுகாப்புக்கு சென்ற இராணுவ ஜீப் மரத்துடன் மோதியது!

### மேஜர் உட்பட இருவர் சாவு! நால்வர் படுகாயம்!!



முல்லைத்தீவு, ஜன. 22

முல்லைத்தீவு, நெடுங்கேணி – தட்டாமலை வீதியில் இராணுவ டிபெண்டர் ஒன்று பனை மரத்துடன் மோதி விபத்துக்குள் ளானதில் மேஜர் ஒருவரும், கோப்ரல் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், 4 இராணுவ அதிகாரிகள் படுகாயமடைந்துள்ள னர்.

முல்லைத்தீவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று விஜயம் பக்கம் 02 »

# சட்டவிரோதமாக நட்ட கம்பங்களை அகற்ற யாழ்.மாநகர முதல்வருக்கு அதிகாரம் உண்டு

## யாழ். நீதிமன்றம் கட்டளை

யாழ்ப்பாணம், ஜன. 22

தனியார் நிறுவனம் ஒன்றால் சட்டவிரோதமாக நடப்பட்ட கம்பங்களை அகற்றுவதற்கு யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் மற்றும் ஆணையாளர் ஆகியோருக்கு அதிகாரம் உண்டு என கட்டளையிட்ட யாழ்ப்பாணம் அவர்களுக்கு எதிரான குற்றவியல் வழக்கைத் தள்ளுபடி செய்தது.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உள்பட்ட பகுதிகளில் சட்டவிரோத மானமுறையில் கேபிள் கம்பங்கள் நடப்பட்டன என்று தெரிவித்து யாழ்ப்பாண மாநகர சபை முதல்வரால் அவை கடந்த வாரம் அகற்றப்பட்டன.

இது தொடர்பில் சட்டவிரோத மான முறையில் கேபிள் கம்பங்களை நட்ட தென்னிலங்கை நிறுவனம் யாழ்ப்பாணம் மாநகர முதல்வருக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கியது.

அந்த முறைப்பாட்டுக்கு அமைவாக யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தார்.

எனினும் வேலைப் பழுவைக் காரணம் காட்டி அவர் பொலிஸ் நிலையத்துக்குச் சமூகமளிக்கவில்லை. அதனால் முதல்வர் இமானுவேல் ஆனல்ட்டிடம் வாக்கு மூலம் பெறுவதற்காக மறுநாள் புதன்கிழமை முதல்வர் அலுவலகத்தில் பொலிஸார் நேரில் சென்றனர்.

அன்றைய தினமும் வாக்கு மூலம் வழங்க மாநகர முதல்வர் மறுப்புத் தெரிவித்திருந்தார். அதனால் கடந்த 18ஆம் திகதி மாநகர முதல்வர் அலுவலகத்தில் வைத்து அவருடைய வாக்கு மூலத்தைப் பதிவு செய்வதாகப் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் இமானுவேல் ஆனல்ட் மற்றும் மாநகர சபை ஆணையாளர் ஆகிய இருவருக்கும் எதிராகச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டின் கீழ் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் கடந்த 17ஆம் திகதி பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்

கேபிள் இணைப்பை வழங்கும் திட்டத்தின் கீழ் தனியார் நிறுவனம் ஒன்றால் நல்லூர் தொடக்கம் கல்வியங்காடு வரையான பகுதியில் 30 கம்பங்கள் நடப்பட்டன. அவற்றை நடுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் முறைப்படி அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனினும் யாழ்ப்பாணம் மாநகர முதல்வரும் ஆணையாளரும் இணைந்து அந்த 30 கம்பங்களையும் அகற்றியுள்ளனர். அதனால் அந்தக் கம்பங்களை நட்ட நிறுவனத்துக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பில் பாதிக்கப்பட்ட நிறுவனம் சார்பில் முறைப்பாடு வழங்கப்பட்டது. அது தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்கு யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் மற்றும் ஆணையாளருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆணையாளரால் வாக்குமூலம் வழங்கப்பட்டபோதும் மாநகர முதல்வர் வாக்குமூலம் வழங்குவதற்கு சமூகமளிக்கவில்லை.

அவர் தனது வாக்குமூலத்தை பிறிதொரு நாளில் வழங்குவதாகத் தெரிவித்துள்ளார். அதனால் குற்றஞ்சாட்டப்பட்டவர்களான யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் மற்றும் ஆணையாளரை நீதிமன்றுக்கு அழைத்து விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் என்று யாழ்ப்பாணம் பொலிஸாரால் மன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டது.

பொலிஸாரின் விண்ணப்பத்தை ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் அந்தோனி சாமி பீற்றர் போல், யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் மற்றும் ஆணையாளர் இருவரும் நேற்றுத் திங்கட்கிழமை நீதிமன்றில் முன்னிலையாக அழைப்புக் கட்டளை அனுப்ப உத்தரவிட்டார்.

வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் இமானுவேல் ஆனல்ட், மாநகர ஆணையாளர் ஆகியோர் மன்றில் முன்னிலையாகினர். ஆணையாளர் சார்பில் மூத்த சட்டத்தரணி இராஜரட்ணமும் முதல்வரின் சார்பில் சட்டத்தரணிகள் ஜொனி மதுரநாயகம், கணாதீபன் உள்ளிட்டவர்களும் முன்னிலையாகினர்.

மாநகர சபை எல்லையில் மாநகர சபையின் அனுமதி பெறப்படாமல் அமைக்கப்பட்ட கம்பங்களை அகற்றுவதற்கு உள்ளூராட்சிச் சபைகள் சட்டத்தின் கீழ் முதல்வருக்கும் ஆணையாளருக்கும் அதிகாரம் உண்டு.

அவர்களால் அகற்றப்பட்ட கம்பங்கள் தொடர்பில் குற்றவியல் வழக்கின் கீழ் நீதிமன்ற நடவடிக்கை எடுக்க பொலிஸாருக்கு ஏற்பாடுகள் இல்லை. எனவே இந்த வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் மன்றில் கூறினர்.

அதனை ஆராய்ந்த நீதிவான் ஏ.எஸ்.பி. போல், யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் இமானுவேல் ஆனல்ட் மற்றும் ஆணையாளர் இருவரையும் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவித்து வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

இதேவேளை, இந்த முறைப்பாட்டை வழங்கிய நிறுவனத்தால் வலிகாமம் கிழக்கு, பருத்தித்துறை நகர சபை உள்ளிட்ட உள்ளூராட்சிச் சபை எல்லைகளிலும் கம்பங்கள் நடப்பட்டுள்ளன. அந்த இடங்களிலும் உள்ளூராட்சிச் சபைகளின் அனுமதியை அந்த நிறுவனம் பெற்றிருக்கவில்லை.

இந்தக் கட்டளையின் அடிப்படையில் ஏனைய உள்ளூராட்சி சபைகளும் அந்த நிறுவனத்தின் கம்பங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-07)

# கல்வியியற் கல்லூரிகளுக்கு ஒரே நேரத்தில் இரு குழுக்கள்

## 25 ஆம் திகதி வர்த்தமானி வரும்

கொழும்பு, ஜன. 22

க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் நாட்டிலுள்ள கல்வியியற் கல்லூரிகளுக்கு ஒரே நேரத்தில் இரு மாணவர் குழுக்களை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுஎனக்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, 2016, 2017 ஆம் ஆண்டு உயர் தரப்பரீட்சை பெறுபேறுகளின்படி 8000 மாணவர்களை ஒரே நேரத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக கல்வியியற் கல்லூரி ஆணையாளர் கே.எம்.எச். பண்டார தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இணைத்துக் கொள்பவர்கள் தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் 25 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# யானை தாக்கி ஒருவர் சாவு

திருமலை, ஜன. 22

திருகோணமலை, சேருநுவரப் பகுதியில் நேற்று அதிகாலை காட்டு யானை தாக்கி, ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் கிளிவெட்டி பகுதியைச் சேர்ந்த 58 வயதுடையவர் என ஆரம்ப கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷவின் பொதுஜன பெரமுன பெரு வெற்றியீட்டியது அல்லவா? அதன் பின்னர், அக்கட்சியின் சார்பில் பிரதேச சபை ஒன்றில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பிக்கு ஒருவர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந் திக்க வந்திருந்தார்.

வந்தவரை உரிய மரியாதை கொடுத்து வரவேற்றார் மஹிந்தர்.

தமது பிரதேச சபையில் பொது ஜனபெரமுன வெற்றி பெற்றிருப்பதால் அந்தப் பிரதேச சபையின் தவிசாளராகத் தம்மை நியமிக்கும்படி மஹிந்தரிடம் வற்புறுத்தினார் பிக்கு.

மஹிந்தருக்கோ அவரை அப்பதவியில் நியமிப்பதில் விருப்பம் இல்லை. சொல்லிப்பார்த்தார். பிக்குவோ கேட்பவராக இல்லை. தவிசாளர் பதவி தமக்கு வழங்கப்பட வேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்றார்.

மஹிந்தரின் உதவியாளர்கள் இந்தப் பிரச்சினையை மஹிந்தர் எப்படிச் சமாளிக்கப் போகின்றார் என்று பார்த்திருந்தனர்.

வந்தவரோ மஹிந்தரின் தீவிர ஆதரவாளர். அத்தோடு பிக்கு. அவரைத் திட்டிப் பேசி துரத்த முடியாது. என்ன செய்வது என்று விலோரும் தடுமாறிப் பார்த்திருந்தனர். அப்போதுதான் சாதுரியமான பதிலை அவிழ்த்துவிட்டார் மஹிந்தர்.

*"குருநான்ஸயா.... உங்களை இந்தப் பதவிக்கு நியமித்தால் எனக்குத்தான் பெரும் பாவம்"* என்றார் மஹிந்தர்.

பிக்குவுக்கோ, பார்த்திருந்த உதவியாளர்களுக்கோ விளங்கவில்லை. முழித்தனர். என்ன வென்று பார்த்தனர். மஹிந்தர் விளக்கினார்.

*"உங்கள் பிரதேச சபையில் மாடு வெட்டும் இறைச்சிக் கடைக்கு அனுமதிப் பத்திரத்தில் கையெழுத்திடுபவர் பிரதேச சபைத் தலைவர் தான். உங்களை நான் பிரதேச சபைத் தலைவராக்கினால், அங்கு மாட்டிறைச்சிக் கடைக்கு, 'பெர்மிட்' வழங்கும்போது அதில் நீங்கள் அனுமதி ஒப்பமிட வேண்டியிருக்கும். ஒரு பிக்குவை மாட்டிறைச்சிக் கடைக்கு அனுமதி வழங்கும் வேலையைச் செய்த பாவம் என்னைத்தான் சூழும். ஆகவே வேண்டாம்."* என்றார் மஹிந்தர்.

அவரின் பதிலைக் கேட்டு பிக்கு மட்டுமல்லர், மஹிந்தரின் உதவியாளர்களே வாயடைத்துப் போயினர்.

ஓர் அரசியல்வாதிக்கு இவ்வாறு தந்திரோபாயமாகப் பதில் கூறி, சாணக்கியமாக விடயங்களைக் கையாளும் திறமையும் இருக்க வேண்டும்.

இந்த வாய்ச்சவாடல் இருந்தால் தான் அரசியலில் தேற முடியும்.

தமிழ் அரசியல்வாதிகளில் அமிர்தலிங்கத்துக்குப் பிறகு அந்தத் திறமை ஓரளவு கொண்டவர் சுமந்திரன்தான் என்பேன். நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...!

-மின்னல்-

### வலி. வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என ஜனாதிபதி அறிவித்தபோதும் மக்களைக் காணிகளுக்குள் செல்ல இராணுவம் அனுமதிக்கவில்லை.

இதனால் தமது காணிகளை மீட்க வந்த உரிமையாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

வடக்கில் 1000 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் நேற்று மீள மக்களிடம் கையளிக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முல்லைத்தீவில் வைத்து அறிவித்திருந்தார்.

இதன்படி வலி வடக்கில் 45 ஏக்கர் காணிகள் விடுவிப்பதாக தெரிவிக்கப்பட்டது. குறிப்பாக தையிட்டி தெற்கில் 30 ஏக்கர் காணிகளும், ஒட்டகப்புலத்தில் 15 ஏக்கர் காணிகளும் விடுவிப்பதாக அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து நேற்றுக் காலை அந்தக் காணிகளின் உரிமையாளர்கள் தமது காணிகளைப் பார்ப்பதற்குச் சென்றிருந்தனர். எனினும் யாரையும் இராணுவம் அவர்களது காணிக்குள் செல்ல அனுமதிக்கவில்லை.

மாலை 4 மணிவரை மக்கள் காத்திருந்தனர். அந்தக் காணிகளை நாளையே (இன்று) விடுவிக்கப்படும் எனவும், அதன் பின்னரே மக்கள் காணிகளுக்குள் செல்ல முடியும் எனவும் இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இதனையடுத்து காலையில் இருந்து மாலை காத்திருந்த மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். (ஐ-07)

### இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில், ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் பத்திரமொன்று முன்வைக்கப்படவுள்ளது.

இதன்படி மூன்று மாகாண சபைகளைக் கலைத்து ஒரே நாளில் அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை நடத்துவதற்கான அமைச்சரவைப் பத்திரமே ஜனாதிபதியால் முன்வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒன்பது மாகாண சபைகளுக்கும், ஒரே நாளில் தேர்தலை நடத்துவதற்கு வசதியாகவே தற்போது செயற்பாட்டு நிலையில் உள்ள தென் மாகாண சபை, ஊவா மாகாண சபை, மேல் மாகாண சபை ஆகியவற்றைக் கலைக்க, ஜனாதிபதி அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கவுள்ளார்.

இது தொடர்பான ஆவணத்தில் அவர் பிலிப்பைன்ஸ் புறப்பட்டுச் செல்வதற்கு முன்னரே கையெழுத்திட்டுவிட்டார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

எதிர்வரும் மே மாதம் ஒன்பது மாகாண சபைகளுக்குமான தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது. (ஐ)

### பொது வேட்பாள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

குருணாகல் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்கள் சிலர் இன்று அரசியல் நிகழ்ச்சி நிரலைக் கவனத்திற் கொள்ளாது தனிப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் செயற்படுவது மிகப்பெரிய குறைபாடாகும். எவ்வாறாயினும் பொது வேட்பாளராகச் செயற்படுவதற்கான அனைத்து அனுபவங்களும் எனக்கு உண்டு. அதனால் மக்களுக்காகவும் நாட்டுக்காகவும் என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பில் எனக்கு உணர்வு உள்ளது.

அரசியலில் இருக்கும் சிக்கல்கள் தொடர்பில் எனக்கு நன்கு அனுபவம் உண்டு. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவ்வாறான பொறுப்புக்களையும் ஏற்றுக் கொள்வது தொடர்பில் எனக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை – என்றார். (ஐ)

### மைத்திரியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டிருந்தார். அவரது பாதுகாப்புக்காகச் சென்ற இராணுவ கொமாண்டோ படையணி வாகனங்கள் பாதுகாப்புப்பணியை நிறைவு செய்துவிட்டு நேற்று மதியம் வவுனியா நோக்கிப் பயணித்தபோதே அதில் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

நெடுங்கேணி – தட்டாமலை வீதியில் உள்ள வீதி வளைவில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வீதிக்கு அருகில் நின்ற பனை மரத்துடன் மோதியுள்ளது.

இந்த விபத்தில் 6 இராணுவ அதிகாரிகள் படுகாயமடைந்த நிலையில் உடனடியாக அம்புலன்ஸ் வாகனங்களில் வவுனியா பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். எனினும், அவர்களில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் அம்பேபுஸ்ஸவைச் சேர்ந்த 33 வயதுடைய மேஜர் அசங்க லியனகே மற்றும் 30 வயதுடைய கோப்ரல் தர அதிகாரி ஆகியோர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். (ஐ)

# தமிழருக்குப் பயனளிக்காத அரசமைப்பை ஆதரியோம்!

## அடித்துக் கூறுகிறார் சார்ள்ஸ் எம்.பி.

வவுனியா, ஜன. 22

தமிழர்கள் கௌரவமாக வாழக் கூடிய வகையில் புதிய அரசமைப் பில் சரத்துகள் உள்ளடக்கப்படாவிட் டால், ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு ஆதரவளிக்கமாட்டோமெனத்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்ம லநாதன் தெரிவித்தார்.

தனிப்பட்ட தேவைகளைக் கருத் திற்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவு வழங்கவில்லை என்றும் அவர் கூறினார்.

வவுனியாவில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற நிகழ்வொன்றில் உரை யாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்–

குறுகிய காலத்தில் தீர்க்கக்கூடிய பிரச்சினைகள் தொடர்பாக எழுத்து மூலம் அரசுக்கு ஏற்கனவே தெரி வித்துள்ளோம்.

தற்போது முன்வைக்கப்பட்டுள்ள புதிய அரசமைப்பு தொடர்பான நிபு ணர் குழுவின் அறிக்கை சரியான முறையில் இறுதிப்படுத்தப்படவேண் டும். தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆளும் வகையில் அரச மைப்பில் மாற்றம் கொண்டுவந்



தால் மாத்திரமே அதற்கு ஆதர வாக வாக்களிப்போம்–என்றார். (ஐ)

# வெளிநாடு வாழ் இலங்கையருக்கு நிரந்தர வதிவிட விஸா விரைவில்

கொழும்பு, ஜன. 22

இரட்டைப் பிரஜாஉரிமையை அங்கீகரிக்காத நாடுகளில் வாழும் இலங்கையர்களுக்காக, நிரந்தர வதிவிட விஸாவை வழங்க குடிவரவு – குடியகல் வுத் திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்திருப் பதாக, திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர்க ளில் ஒருவரான சமிந்த ஹெட்டியாராச்சி தெரிவித் துள்ளார்.

இத்தகைய இலங்கையர்களின் அறிவையும், ஆற்றல்களையும் நாட்டின் அபிவிருத்தியில் இணைத் துக் கொள்வதே, இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இவ்வாறான நிரந்தர வதிவிட விஸாவைப் பெற்றுக் கொள்வதன் மூலம், வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் பல உரிமைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும். இதன் பிரகாரம், இலங்கையில் முதலீடு செய்தல், காணிகளைக் கூலிக்குப் பெற்றுக் கொள்ளுதல் போன்ற அனுகூலங்கள் முக்கிய மானவையாகும் என்றும் ஹெட்டியாராச்சி குறிப்பிட் டுள்ளார்.

இலங்கையில் இரட்டைப் பிரஜாவுரிமை கோரிய மேலும் ஆயிரம் பேருக்கு, இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கப்படவுள்ளது. மேலும், ஐயாயிரம் பேர் இரட் டைப் பிரஜாவுரிமைக்காகக் காத்திருக்கின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# ராஜபக்ஷ குடும்பத்தில் இருந்து வேட்பாளர் களமிறங்கினால் அதிசயம் ஒன்றுமில்லை!

கொழும்பு, ஜன. 22

ராஜபக்ஷ குடும்பம் இந்நாட்டில் குடும்ப ஆட்சி நடத்தவில்லை. நாட்டை மீட்டெடுக்கவே பாடுபட்டது. இந்தக் குடும்பத்திலிருந்து ஜனாதிபதி வேட்பாளர் களமிறங்கினால் அதிசயிக்க ஒன்றும் இல்லை.

– இப்படித் தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

'சமல் ராஜபக்ஷவும், கோட்டாபய ராஜபக்ஷவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயாராக இருக் கின்றனர் என அறிவித்துள்ள நிலையில், உங்களின் கட்சியின் நிலைப்பாடு என்ன?' என்று தமிழ் ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே மஹிந்த மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இந்த நாட்டைப் பயங்கரவாதிகளிடமிருந்து மீட்டெடுக்க ராஜபக்ஷ குடும்பம் அயராது உழைத் தது. பயங்கரவாதிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் இருந்துகூட ராஜபக்ஷ குடும்பம் மயி ரிழையில் தப்பியது.

ராஜபக்ஷ குடும்பம் இந்த நாட்டில் குடும்ப ஆட்சி நடத்தவில்லை. நாட்டை மீட்டெடுக்கவே பாடுபட்டது. இந்தக் குடும்பத்திலிருந்து ஜனாதிபதி வேட்பாளர்



கூறுகின்றார் மஹிந்த

களமிறங்கினால் அதிசயிக்க ஒன்றும் இல்லை. வெற்றிதான் எமது இலக்கு. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்று இப்போதைக்குக் கூறமாட்டோம்.

எனினும், வெற்றியை உறுதிப்படுத்தும் பொருத் தமான வேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் நாம் களமிறக்குவோம்.

நாம் முன்னேற்றம் அடையச் செய்த நாட்டை நாசமாக்கிக்கொண்டிருக்கும் ரணில் தரப்பினரை வீட்டுக்கு அனுப்பியே தீருவோம்–என்றார். (ஐ)

# யானை தாக்கி ஒருவர் சாவு

திருமலை, ஜன. 22

திருகோணமலை, சேருநுவரப் பகுதியில் நேற்று அதிகாலை காட்டு யானை தாக்கி, ஒருவர் உயிரிழந் துள்ளார். உயிரிழந்தவர் கிளிவெட்டி பகுதியைச் சேர்ந்த 58 வயதுடையவர் என ஆரம்ப கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. (ஐ)

# புதிய அரசமைப்பு தொடர்பில் தமிழ்க் கூட்டமைப்பு நேர்வழி

## லக்ஷ்மன் கிரியெல்ல நற்சான்றிதழ்

கொழும்பு, ஜன. 22

புதிய அரசமைப்பு குறித்து தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புடன் எந்த இரகசிய உடன்படிக்கையையும் ஐக்கிய தேசியக் கட்சி செய்து கொள்ளவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேர்மையான வழியில் அரசுடன் பேச்சு நடத்தி வரு கின்றது. உண்மையான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள அரசமைப்பைப் பயன்படுத்துகின்றோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர் லக்ஷ்மன் கிரி யெல்ல தெரிவித்தார்.



இரகசிய உடன்படிக்கை என்ற கட்டுக்கதை கட்டி ஆட் சியை வீழ்த்த முயற்சித்து வருகின்றனர். தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு வடக்கு மக் களின் அபிமானத்தைப் பெற்ற தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்ற கட்சி யாகும். அவர்கள் ஆயுதக் குழுக்களோ அல்லது சட்ட விரோத அமைப்பினரோ அல்லர். இந்த நாட்டில் ஒரு தொகுதி மக்களின் பிரதிநிதிகள்–என்றார். (ஐ)

# தேர்தல் தாமதம் குறித்து நாடாளுமன்றில் கேள்வி

## மஹிந்த தரப்பினர் தீர்மானம்

கொழும்பு, ஜன. 22

மாகாண சபைத் தேர்தலை அரசு தொடர்ந்துதாமதப்படுத்தி வருகின்றமை குறித்து நாடாளுமன்றில் கேள்வி எழுப் படவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப் பின் கொழும்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தேர்தல் தாமதம் குறித்து தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவதற் குச் சபாநாயகர் கரு ஜயசூரிய முன்னர் கால அவகாசம் கோரியிருந்தார். ஆறு மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத் தப்பட வேண்டியுள்ள நிலையில், இந்த வாரம் அது தொடர்பில் சபாநாயகரிடம் கேள்வி எழுப்புவோம்.

புதிய கலப்பு முறையில் தேர்தலை நடத்துவது சிக்கலானது எனத் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்தப் பிரச்சினை யைத் தீர்த்து உடனடியாகத் தேர்தலை நடத்தும் பொறுப்பை தேர்தல் ஆணை யகம் நாடாளுமன்றிடம் முன்வைத் துள்ளது–என்றார்.

(ஐ)

# இரணைமடு குடிதண்ணீர்: சிறிதரனுடன் ஆளுநர் பேச்சு

கிளிநொச்சி, ஜன. 22

கிளிநொச்சிக்குப் பயணம் செய்த வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீத ரனை நேற்று முன் தினம் இரவு அவரது அலுவலகத்தில் சந் தித்துக் கலந்துரையாடினார். இந்தக் கலந்துரையாடலின்போது செயலிழந்து காணப்படுகின்ற குறிஞ்சாத்தீவு உப்பளம், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் போன்ற தொழிற்சாலை களை உருவாக்கி வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துதல், விவசாயிகளுடைய நலன்களில் அக்கறை செலுத்துதல் மற்றும் விவசாயப் பண்ணை களை விடுவித்தல் போன்ற பல்வேறு விட யங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள் ளது.



இதன்போது ஊட கங்களுக்குக் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர், நீர்ப் பாசனத் திட்டத்திலேயே தமிழ் மக்களின் ஒற்றுமை தொடர்பில் ஒரு சுமுகமான முடிவு பெறவேண்டும். அதற்கான முன் யோசனைகள் பற்றியும் நான் கேட்டிருக்கின்றேன். நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்த கருத்துகளை நாங்கள் கேட்டுள்ளோம். மழை நீரை நம்பி இருக்கின்ற தமிழ் பேசும் மக்களுக்கு இது சாதகமாக அமைய வேண்டும் என்பதுதான் என்னுடைய முடிவாகும். அதுபோலவே அவருடைய முடிவும் அதுவாக இருக்கும் என்று நான் நம்புகின்றேன்–என்றார். (ஐ)

# நாலக டி சில்வாவின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஜன. 22

ஜனாதிபதி மைத்திரிபால உள்ளிட்ட முக்கிய பிரமுகர் களை கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டிய சந்தேகத் தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வாவின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதிவரை அவரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்றுத் திங்கட்கிழமை உத்தர விட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரி மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய உள்ளிட்ட பிரமுகர்களைக் கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டப்பட்டதில் நாலகவுக்கும் பங்குண்டு என ஊழல் எதிர்ப்பு செயற்பாட்டாளரான நாமல் குமார தகவல் வெளியிட்டிருந்தார். அதன் பின்னர் ஐந்து நாள்கள் தொடர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வந்த நாலக டி சில்வா, கடந்த 2018ஆம் ஆண்டு நவம் பர் மாதம் 25ஆம் திகதி குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## ரெலோவின் தேவையற்ற செயல்

**இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் அதீத நம்பிக்கையோடு முயன்று வந்த தமிழ்த் தலைவர்களான சம்பந்தனுக்கும் சுமந்திரனுக்கும் மற்றொரு நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கின்றது தமிழீழ விடுதலை இயக்கம்.**

**அண்மைக் காலம் வரை இவ்விடயத்தில் வெளியில் இருந்து எதிர்ப்பைச் சம்பாதித்து வந்த இருவருக்கும் இப்போது முதல் தடவையாக கூட்டமைப்பின் உள்ளேயிருந்தும் எதிர்ப்பு வெளிப்படையாக வந்திருக்கின்றது. எதிர்ப்பு என்பதைப் பார்க்கிலும் இதனை முதுகில் விழுந்த குத்தாகவே கருத வேண்டியிருக்கின்றது.**

**செய்ய வேண்டிய விடயத்தை செய்ய வேண்டிய நேரத்தில் செய்யாமல் இருப்பதும், செய்யக் கூடாத நேரத்தில் செய்வதும் தவறாகும். இந்த விடயத்தில் அத்தகைய பெருந் தவறை ரெலோ இழைத்திருப்பதாகவே கருதுகிறோம்.**

**ஒரு வகையில் இது – இப்போது ரெலோ பண்ணியிருக்கும் இந்தக் காரியம் – இதுவரைப் பொறுத்திருந்து விட்டு இந்தக் கட்டத்தில் இப்படி ஒரு 'வீர அறிக்கையை' வெளியிட்ட செயல் 'விழுந்த மாட்டில் குறி சுட்ட வேலையை' ஒத்ததாகும்.**

***"தமிழ்க் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இவ்விவகாரங்கள் பற்றி எல்லாம் பல தடவைகள் விடாது வலியுறுத்தி வந்தோம். கடந்த டிசெம்பர் 31 ஆம் திகதி வரை நியாயமான தீர்வு முயற்சிக்கு கால அவகாசம் வழங்கி வந்தோம். அது பற்றியும் சம்பந்தன் சுமந்திரன் உட்பட்ட கூட்டமைப்புத் தலைவர்களுக்குத் திரும்பத் திரும்ப எடுத்துரைத்து வந்தோம். இப்போது நிலைமை ஏற்றுக் கொள்ள முடியாத கட்டத்துக்கு வந்து விட்டது. ஆகவே வெளிப்படையாக எமது முடிவை அறிவிக்கிறோம்"*** **– என்றெல்லாம் ரெலோ தரப்பு இப்போது சல்ஜாப்புக் கூறலாம்.**

**ஆனால், இந்த அறிவிப்பை – சம்பந்தன், சுமந்திரன் தங்களது தீவிர முயற்சியின் பெறுபேறாகக் காட்ட முயலும் அமைதித் தீர்வு எத்தனத்துக்கான யோசனைத் திட்டத்தின் முன்வடிவத்தை இந்தக் கட்டத்தில் நிராகரித்து பகிரங்க அறிவிப்பு விடும் ரெலோவின் இந்த அரசியல் நிலைப்பாடு – அந்த முயற்சியின் தோல்வியிலிருந்து ரெலோ தன்னை மட்டும் விடுவித்துக் காப்பாற்றிக் கொள்ளும் அரசியல் சந்தர்ப்பவாதம் அன்றி வேறில்லை.**

**புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிக்காகக் கூடிய அரசமைப்பு வழிகாட்டல் குழு மற்றும் அரசமைப்புப் பேரவையாகக் கூடிய நாடாளுமன்றம் ஆகியவற்றில் இது தொடர்பாக இடம்பெற்ற வாதங்கள், கருத்து வெளிப்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு மாதிரி நகல் யாப்புக்கான முன்வடிவத்தை நிபுணர் குழு தயாரித்து முன்வைத்திருந்தது.**

**அந்த அறிக்கையை ஒரு முக்கிய ஆவணமாக – சாதனமாக – சுமந்திரன் ஒரு புறம் காட்ட முயல, அதனைப் பகிரங்கமாக நிராகரிப்பதாக ரெலோ இப்போது அறிக்கை வெளியிட்டிருக்கின்றது.**

**இந்தத் தீர்வு முயற்சிகள் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மற்றும் வடக்கு முன்னாள் முதல்வர் சி.வீ.விக்னேஸ்வரன் ஆகியோர் திரும்பத் திரும்பக் கூறி வந்த விடயத்தையே – அரைத்த மாவையே – வேறு சொல்லாடல்கள், வார்த்தைகளில் இந்த அறிக்கையை நிராகரிக்கும் தனது அறிவிப்பில் இப்போது கையாண்டிருக் கின்றது ரெலோ.**

**அந்த விடயதான சர்ச்சைக்குள் நாம் அதிகம் இறங்கப் போவதில்லை.**

**இந்த விவகாரங்கள்தான், இப்படி, இப்படி எல்லாம் அந்த அறிக்கையில் அமையும் என்பது சுமந்திரனாலும், சம்பந்தனாலும் ஏற்கனவே அவ்வப்போது கோடி காட்டப்பட்டே வந்தது. அவற்றின் காரணமாக அந்த முயற்சிகள் மீதான விமர்சனங்களையும் கஜேந்திரகுமார், விக்னேஸ்வரன் போன்றோர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தித் தெளிவுபடுத்தியும் வந்தனர்.**

**அதே விடயங்களையே இப்போது வெளிப்படையாகத் தூக்கிப் பிடித்துக் காட்டி, இந்த விவகாரத்தில் இருந்து தன்னை விடுவித்து, தவறுகளையும் முயற்சித் தோல்விகளையும் சம்பந்தன் – சுமந்திரன் இணை மீது தள்ளி விட்டுத் தான் தப்ப ரெலோ அவசரப்பட்டு எடுத்த முயற்சியே இந்த அறிவிப்பு.**

**உதாரணத்துக்கு இந்த முயற்சியில் பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் நிலைப்பாடு. இதனை ஒரு விடயமாகச் சுட்டிக்காட்டி இன்று விமர்சிக்கின்றது ரெலோ. பௌத்தத்துக்கு முன்னுரிமை அளிக்கும் தற்போதைய அரசமைப்பு ஏற்பாடுகளைத் தொடர்ந்து அனுமதிப்பது என்ற இணக்கப்பாடு புதிதாக இப்போது வந்த விடயம் அல்ல. ஏற்கனவே கஜேந்திரகுமார், விக்னேஸ்வரன் போன்றோர் கண்டித்து, விமர்சித்து பிய்த்து உதறிப் போட்ட பழைய சமாச்சாரம். கூட்டமைப்புக்குள்ளும் வெளியேயும் பேசப்பட்ட விவகாரம். புதிதாக நிபுணர் குழு அறிக்கையில் வந்த விவகாரம் அல்ல.**

**அடுத்தது – ஒரு முக்கியமான அம்சம். தீர்வு முயற்சிகளில் சர்வதேச சம்பந்தம். இந்தத் தீர்வு முயற்சிகளில் தமிழர் தரப்பு நேர்மைத் திறனுடனும், முழு ஈடுபாட்டுடனும், முழு நம்பிக்கையுடனும் பங்குபற்றுகின்றது, பங்குபற்றும் என்பதைக் காட்டுவதும், தீர்வு முயற்சிகள் குழம்பினால், வழமைபோல அதற்குக் காரணம் தென்னிலங்கை ஆட்சித் தரப்பின் ஏமாற்று வேலைதான் என்பதையும் இந்த விடயத்தில் அம்பலப்படுத்துவதுதான் தமது தந்திரோபாயம் என்பதை மிகத் தெளிவாகவே சம்பந்தனும், சுமந்திரனும் வெளிப்படுத்தி வந்தனர்.**

**இந்த தீர்வு முயற்சிகளில் தமிழ்த் கூட்டமைப்புடன் ஈடுபட்டு வந்த அரசுத் தரப்பினர் ஒவ்வொருவராக முதுகில் குத்தும் வேலையை ஆரம்பித்து விட்டனர். ஒக்ரோபர் 26 ஆம் திகதியுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டார். கடைசியாக அரசமைப்புப் பேரவையாக நாடாளுமன்றம் கூடியபோது, அங்கு ஆற்றிய உரைகளின் மூலம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது ஐ.தே.கட்சியினரும், தீர்வு முயற்சி விவகாரத்தில் சம்பந்தன் – சுமந்திரன் முதுகில் குத்தத் தொடங்கி விட்டனர் என்பது அம்பலமாகத் தொடங்கி விட்டது.**

**ஆக, நீதியான, நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய தீர்வு ஒன்றைக் காணும் தமிழர் தரப்பின் நேர்மையான முயற்சிகளை வழமை போல ஏமாற்றிக் குழப்பும் கைங்கரியத்தைத் தென்னிங்கைச் சிங்களத் தரப்பே முன்னெடுக்கின்றது என்பதை சர்வதேசத்துக்கு சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கக் கிடைத்திருக்கும் ஓர் அருமையான வாய்ப்பை, தமிழர்களும் பிளவுபட்டு நின்று அந்த முயற்சியைக் குழப்பினர்கள் என்ற இழிசொல்லை வாங்கித் தந்து குளறுபடி பண்ணும் வேலையையே ரெலோ இந்த அறிவிப்பு மூலம் செய்திருக்கின்றது.**

# கொக்கட்டிச்சோலை படுகொலை 32ஆவது ஆண்டு நிகழ்வுக்கு அழைப்பு

மட்டக்களப்பு,ஜன.22

மட்டக்களப்பு மாவட்டம் படுவான்கரை பெருநிலம் கொக்கட்டிச்சோலை படுகொலையின் 32ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு உணர்வுபூர்வமாக எதிர்வரும்28ஆம்திகதிதிங்கட்கிழமை பி.ப,2,மணிக்கு மகிழடித்தீவு சந்தி நினைவு கோபுர வளாகத்தில் வழமை போன்று பட்டிப்பளை பிரதேச இலங்கை தமிழரசு கட்சி கிளையின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது.

மண்முனை தென்மேற்கு பிரதேசசபை தவிசாளரும் மண்முனை தென்மேற்கு பிரதேச இலங்கை தமிழரசு கட்சி தலைவருமான சி.புஷ்பலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் –

நினைவு சுடர்கள் ஏற்றுதல், மலரஞ்சலி வணக்கம் தெரிவித்தல், அகவணக்கம் செலுத்துதல், நினைவு உரைகளும், மறைந்தாலும் மறையாது என்ற சிறப்பு கவியரங்கம் பட்டிப்பளை பிரதேச கவிஞர்களால் இடம் பெறுவதுடன் முனைக்காடு நாகர் சந்தி கலாமன்றத்தின் நினைவு இசையும் அசைவும் நிகழ்வு உணர்வுபூர்வமாக இடம்பெறும்.

கடந்த 1987,ஜனவரி மாதம் 27ஆம் திகதி முதலைக்குடா இறால்வளர்ப்பு பண்ணையில் இலங்கை இராணுவம் மேற்கொண்ட படுமோசமான இனப் படுகொலையே கொக்கட்டிச் சோலை படுகொலையாகும்.

இந்தப்படுகொலையில் முனைக்காடு,முதலைக்குடா, மகிழடித்தீவு, பண்டாரியாவெளி, படையாண்டவெளி,கடுக்காமுனை,கொக்கட்டிச்சோலை, அரசடித்தீவு,அம்பிளாந்துறை, கற்சேனை, பட்டிப்பளை,தாந்தாமலை ஆகிய கிராம மக்கள் மட்டுமன்றி வவுணதீவு பிரதேசம், வெல்லாவெளி பிரதேசம் மற்றும் படுவான்கரை பெருநிலம் அடங்கலாக நூற்றுக்கணக்கான பொது மக்கள் இராணுவத்தின ரால் சுட்டும் வெட்டியும் கொலை செய்யப்பட்டனர்.

அந்தநினைவுதினம்இலங்கை தமிழரசு கட்சியின் மண் முனை தென்மேற்கு பிரதேச கிளையினால் கொக்கட்டிச்சோலை படுகொலை நினைவு தொடர்ச்சியாக முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனின் விடாமுயற்சியால் பல கெடுபிடிகள் மத்தியிலும் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# யாழில் நினைவேந்தலும் கவனவீர்ப்பு போராட்டமும்

யாழ்ப்பாணம்,ஜன.22

திருமலையில் கடந்த 2016ம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் 13வது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி கவனவீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுக்க ஊடக அமைப்புக்கள் தயாராகி வருகின்றன.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் 13 வது ஆண்டு நினைவேந்தல் நாளில் ஊடக படுகொலைகளுக்கான நீதி கோரி ஊடக அமைப்புக்கள் பங்கெடுக்கும் மாபெரும் கவனவீர்ப்பு போராட்டத்தை யாழிலுள்ள படுகொலையான ஊடகவியலாளர்கள் நினைவு தூபி முன்றலில் நடத்த அவை திட்டமிட்டுள்ளன.

எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.ஊடக அமையத்தின் ஒருங்கிணைப்பில் நடைபெறவுள்ள போராட்டத்தில் வடக்கு கிழக்கு ஊடக அமைப்புக்கள், மற்றும் தென்னிலங்கை சகோதர ஊடக அமைப்புக்கள் இணைந்து பங்கெடுக்கின்றன.

ஊடகப் படுகொலைக்கான நீதி கோரும் இப் போராட்டத்தில் அனைவரையும் திரண்டு நீதிக்காக குரல் கொடுக்க ஊடக அமைப்புக்கள் அழைப்பு விடுத்துள்ளன.

# போதைப்பொருள் தடுப்பு வாரம்; யாழில் மாணவர் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)



போதைப்பொருள் தடுப்பு வாரத்தை முன்னிட்டு போதைப் பொருளுக்கு எதிராக பாடசாலை மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் கல்வியங்காடு செங்குத்தா இந்துக் கல்லூரி மாணவர்கள் பாடசாலைக்கு முன்பாக நேற்றுக் காலை இப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போதைப்பொருளுக்கு எதிரான செயற்பாட்டை ஜனாதிபதி நேற்று ஆரம்பித்துள்ளார். இதற்கமைய போதைப்பொருள் ஒழிக்கும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நேற்று முதல் ஒரு வாரம் போதைப் பொருள் ஒழிப்பு வாரமாக பிரகடனப் படுத்தப்பட்டு போதைப் பொருளுக்கு எதிரான போராட்டங்கள் விழிப்புணர்வுகள் ஏற்படுத் தப்பட்டு வருகின்றன.

# நிதி ஒதுக்கப்பட்டபோதும் விளம்பரப் பலகை இல்லை

கிளிநொச்சி,ஜன.22

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கம்பெரலிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் விவரங்கள் அடங்கிய விளம்பர பலகைக்கு ஒவ்வொரு வேலைத்திட்டத்திலும் ஆறாயிரம் ஒதுக்கப்பட்டும் அவை அமைக்கப்படவில்லை என பொது மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சமீப காலத்தில் மத்திய அரசின் கம்பெரலிய திட்டத்தின் கீழ் கிளிநொச்சியில் வீதிகள் உள்ளிட்ட பல அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றின் பணிகள் நிறைவுற்ற பின்னரும் அதற்கான விளம்பரப் பலகைகள் காட்சிப்படுத்தப்படவில்லை.

ஆனால் இந்த ஒவ்வொரு அபிவிருத்திப் பணிக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் விளம்பர பலகைக்கு ஆறாயிரம் ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது. என்று சுட்டிக்காட்டும் பொது மக்கள் விளம்பர பலகை அமைக்காத நிலையில் அந்தப் பணத்துக்கு என்ன நடந்தது என்றும் கேள்வி எழுப்புகின்றனர்.

## நாளை

**23.01.2019**
**புதன்கிழமை**

நட்சத்திரம் : மகம் பி.இ 1.17 வரை
திதி : துதியை காலை 7.09 வரை
**சுபநேரம் : 5.06 - 6.36 வரை**
**இராகுகாலம் : 12.36 - 2.06 வரை**

# புதிய சித்திரத்தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார் முருகன்



வவுனியா,ஜன.22

வவுனியா கந்தசாமி ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா இம்முறை புதிதாக உருவாக்கப்பட்ட தேரில் சிறப்பாக நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சுமார் 100 வருடங்கள் பழமை வாய்ந்த வவுனியா கந்தசாமி ஆலயத்துக்கு புதிதாக 2 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட 24அடி உயரம் கொண்ட திராவிட பாணியிலான தேர்வெள்ளோட்டம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம்(20) தேர்த்திருவிழா இடம்பெற்றது. ஆலய உற்சவகால பிரதம குரு யாழ் சுன்னாகத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ நா.சிறிகாந்த குருக்கள் மற்றும் ஆலய பிரதம குரு இ.உமாசுதா குருக்கள் தலைமையில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து தேர் பவனி இடம்பெற்றது.

இதன்போது முருகப்பெருமான் பிரதான வீதியூடாக பவனி வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

(100)

## அறநெறி பாடசாலையின் ஓராண்டு நிறைவு விழா



முல்லைத்தீவு,ஜன.22

முல்லைத்தீவு நெடுங்கேணி மாமடுச்சந்தி வெள்ளைப்பிள்ளையார் ஆலய கற்பகா அறநெறிப்பாடசாலையின் ஓராண்டு நிறைவு விழா நேற்றுமுன்தினம் (20-01-2019) மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி. சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா , சி.சிவமோகன், சிறப்பு விருந்தினராக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர். ஜி.ரி.லிங்கநாதன், ஒட்டுசுட்டான் பிரதேச இந்து கலாசார அலுவலர் மோகன்ராஜ் , கௌரவ விருந்தினர்களா கமு/தண்டுவான் அ.த.க.பாடசாலை அதிபர், மு/இத்திமடு அ.த.க.பாடசாலை அதிபர், மு/அலைகல்லுப்போட்டகுளம் அ.த.க.பாடசாலை அதிபர், மு/மாமடு,பழம்பாசி அ.த.க. பாடசாலை ஆசிரியர்களும் கிராம அபிவிருத்திச் சங்க பொருளாளரும் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் கிராமத்தைச் சேர்ந்த பெருமளவான மக்கள் கலந்து சிறப்பித்தனர்.

## சுகாதாரச் சீர்கேட்டுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

### தவிசாளர் தியாகராஜா நிரோஷ்

வலி.கிழக்கு,ஜன.22

சுகாதாரக் கேடான முறையில் பேணப்பட்டு வரும் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான கிணற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகளை இழைப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

ஆவரங்கால் பகுதியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான களஞ்சியம் மற்றும் தனியார் ஒருவருக்கு பங்கு உரித்தாகக் காணப்படும் கிணறு ஒன்றினுள் பொலித்தீன் கழிவுகளையும் இதர சில கழிவுப் பொருள்களும் வீசப்பட்டு வருகின்றன. இதனால் அப்பகுதியில் சுகாதாரச் சீர்கேடும் துர்நாற்றமும் வீசுகின்றது.

இதுபற்றி பலரும் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் சுகாதாரக் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தனர். சபையின் மாதாந்தக் கூட்டங்களிலும் உறுப்பினர்களால் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.



இவ்வாறான முறைப்பாடுகளையடுத்து பிரதேச சபையினர் பல தடவைகள் கூட்டுறவுச் சங்கத்துக்கு அறிவுறுத்தியும் அவர்களால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மேலும் அண்மையில் பிரதேச சபையின் பொறுப்பதிகாரியினால் அறிவுறுத்தல் கடிதமும் சமர்ப்பிக்கப்பட்டது. எனினும் அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால் கிணறு அமைந்துள்ள பகுதிக்கு கடந்த சனிக்கிழமை காலை சுகாதார அதிகாரிகளுடன் சென்று பார்வையிட்ட வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர், இவ் விடயம் தொடர்பில் சுகாதார அதிகாரிகள் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

இதேவேளை எதிர்காலத்தில் இவ்வாறாக வளவுகளில் சுகாதாரத்துக்கு அச்சுறுத்தலான விடயங்கள் குறித்து உரிமையாளர்கள் அசமந்தப் போக்குடன் பொது நலனை மறந்து செயற்படுவராயின் பிரதேச சபைச்சட்டத்தின் வாயிலாகவும் சுகாதாரம் தொடர்பில் நாட்டிலுள்ள ஏனைய சட்டங்களின் அடிப்படையிலும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

(ஏ)

## கல்முனை விஷ்ணு கோயில் வீதி புனரமைக்கப்பட்டு திறப்பு



கல்முனை விஷ்ணு கோயில் வீதி புனரமைக்கப்பட்டு உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு கம்பெரலிய திட்டத்தின் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் ரூபா 20 இலட்சம் நிதியை இவ்வீதி நிர்மாணத்துக்காக ஒதுக்கி இருந்தார்.

கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜனின் வேண்டுகோளின் அடிப்படையில் குறித்த வீதிக்கான நிதி பெற்றுக்கொடுக்கப்பட்டதுடன் நேற்றுமுன்தினம்(20) மாலை அந்த வீதி மக்களின் பாவனைக்காக உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் மற்றும் கல்முனை மாநகர உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் உள்ளிட்ட மாநகர சபை உறுப்பினர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். சுமார் 170 மீற்றர் நீளமான இவ்வீதி கடந்தகால யுத்த சூழ்நிலை, சுனாமி அனர்த்தத்தினால் போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் சேதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### மாவட்டபுரம் கந்தசாமி கோவில்

## தேர் பவளக்கால் நடும்விழா சிறப்பாக நடைபெற்றது

மாவிட்டபுரம் அருள்மிகு ஸ்ரீ கந்தசாமி கோவிலில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள முகவுத்தரத் தேர் பவளக்கால் விழா நேற்றுமுன்தினம் (20) காலை 10.30 மணியளவில் மிகப் பிரமாண்டமான முறையில் நடைபெற்றது. இந்நிகழ்வை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு பூசை வழிபாடுகளில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்.

கடந்தகால யுத்தம் காரணமாக முற்றாக சேதமடைந்த இந்த ஆலயத்தின் தேர் மீள் கட்டுமானம் செய்யும் முயற்சிகள் கோயில் நிர்வாகத்தினரால் முன்னெடுக்கப்பட்டது.



ஆனாலும் குறித்த கட்டுமாணப் பணிகளை முன்னெடுப்பதில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டிருந்த நிலையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு ஆலய நிர்வாகத்தினரால் கொண்டுவரப்பட்டதை அடுத்த புதிய சிற்பத்தேர் கட்டுமானம் முழுமையான நிலையை எட்டியது.

இந்நிலையில் இந்த தேருக்கான பவளக்கால்நடும்விழாவை முன்னிட்டு காலை 7.30 மணிக்கு ஸ்நபனா அபிஷேகமும், 8.30 மணிக்கு விஷேட பூசை ஆராதனைகளும், 10 மணிக்கு பவளக்கால் உள்வீதி திரு ஊர்வலமும் நடைபெற்று காலை 10.30 மணிக்கு பவளக்கால் நடும் விழா நடைபெற்றது.

இலங்கையிலுள்ள தேர்களிலேயே மிக உயரமான தேராகக் கருதப்படும் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலின் முகவுத்தரத் தேரானது, 45 அடி உயரமானதாக ஸ்தபதி கந்தசாமி இளங்கோவனால் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பவளக்கால் விழாவில் நூற்றுக்கணக்கான அடியார்கள் கலந்து கொண்டு, முருகப் பெருமானின் திருவருளைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் மீட்கப்படும் எலும்புக்கூடுகள் போரில் கொல்லப்பட்ட தமிழர்களுடையவை

## சந்தேகம் கொள்ளும் பா.ம.க நிறுவுனர் ராமதாஸ்



சென்னை,ஜன.22

மன்னாரில் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள், ஈழப்போரில் கொல்லப்பட்ட தமிழர்களுடையவையாக இருக்கலாம் என நம்பத் தோன்றுகிறது என, பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ராமதாஸ் நேற்று (திங்கள்கிழமை) வெளியிட்ட அறிக்கையில், இலங்கை வடக்கு மாநிலத்தின் மன்னார் நகரில் தோண்டத் தோண்ட மனித எலும்புக் கூடுகள் கிடைத்த வண்ணம் இருக்கின்றன என செய்திகள் வெளியாகி இருக்கின்றன. கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் அனைத்தும் தமிழர்களுடையவையாக இருக் கலாம் என்று எழுப்பப்படும் ஐயங்கள் அதிர்ச்சியளிக்கின்றன.

மன்னார் நகரில் கூட்டுறவு சங்கக் கட்டடம் கட்டுவதற்காக கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் பள்ளம் தோண்டிய போது பூமிக்கு அடியில் ஏராளமான எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து அப்பகுதியில் மருத்துவ வல்லுநர்கள், தடயவியல் மற்றும் தொல்லியல் துறை அதிகாரிகள் குழுவினர் ஆய்வு மேற்கொண்டு வந்தனர். அவர்களின் ஆய்வில் இதுவரை 300க்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. 125 நாள்களுக்கும் மேலாக நடைபெற்று வரும் அகழாய்வுப் பணிகளைப் பார்வையிட ஊடகங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பதால் இந்த உண்மைகள் வெளிவந்துள்ளன.

மன்னார் நகரில் தோண்டி எடுக்கப்பட்டுள்ள மனித எலும்புக் கூடுகள் யாருடையவை என்பது இதுவரை உறுதிசெய்யப்படவில்லை. அமெரிக்காவின் மியாமி நகரில் உள்ள ஆய்வகத்துக்கு எலும்புக்கூடுகள் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றின் முடிவு வெளிவந்த பிறகு தான் இதுகுறித்த உண்மைகள் வெளிவரும் என்று மருத்துவக் குழுவினர் தெரிவித்துள்ளனர். ஆனாலும், சந்தர்ப்ப சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது எலும்புக்கூடுகள் தமிழர்களுடையவையாக இருக்கலாம் என நம்பத் தோன்றுகிறது.

2009 ஆம் ஆண்டு நடைபெற்ற ஈழப்போரில் விடுதலைப்புலிகள் போரை நிறுத்திய நிலையில், ஒன்றரை லட்சம் அப்பாவித் தமிழர்களை இலங்கைப் படைகள் கொடூரமான முறையில் படுகொலை செய்தன. அடுத்த சில நாள்களுக்கு சர்வதேச ஊடகங்களையும், உள்நாட்டுச் செய்தியாளர்களையும் சண்டை நடந்த வடக்கு மாகாணத்திற்குள் அனுமதிக்காத இலங்கைப் படைகள், கொல்லப்பட்ட ஈழத்தமிழர்களின் உடல்களை அழிக்கும் பணியிலும், அகற்றும் பணியிலும் ஈடுபட்டன. அவ்வாறு போர் முனையிலிருந்து அகற்றப்பட்ட தமிழர்களின் உடல்களில் ஒரு பகுதி மன்னார் நகரில் புதைக்கப்பட்டிருக்க வாய்ப்புள்ளது.

மன்னாரில் கண்டெடுக்கப்பட்ட உடல்கள் தமிழர்களுடையவை தான் என்று கருதுவதற்கு ஏராளமான காரணங்கள் உள்ளன. முதலாவதாக, மன்னார் பகுதியில் ஒரே இடத்தில் 300 பேரை புதைக்கும் அளவுக்கு அப்பகுதிகளில் அதிக அளவிலான உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை. ஒருவேளை எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்ட இடம் கடந்த காலத்தில் இடுகாடாக இருந்திருக்கலாமா? என்றால் அதற்கும் வாய்ப்புகள் இல்லை. ஏனெனில், இடுகாடாக இருந்தால் உடல்கள் இடைவெளிவிட்டு கிடைமட்டமாகத் தான் புதைக்கப்பட்டிருக்கும். ஆனால், இப்போது கண்டெடுக்கப்பட்ட உடல்கள் அவ்வாறு புதைக்கப்படவில்லை. மாறாக, ஒரே இடத்தில் ஒன்றின்மீது ஒன்றாக உடல்கள் புதைக்கப்பட்டிருக்கின்றன என்பதால் அவை, இனப்படுகொலை செய்யப்பட்ட தமிழர்களின் உடல்களாக இருக்க வாய்ப்புகள் அதிகம்.



இலங்கைப் போரில் ஒன்றரை லட்சம் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு பத்தாண்டுகள் நிறைவடையவுள்ள நிலையில், அதற்குக் காரணமான குற்றவாளிகளுக்கு இன்று வரை தண்டனை வழங்கப்படவில்லை என்பதே உலக சமுதாயம் வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயமாகும். ஈழத் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டமையை நிரூபிக்கத் தேவையான பல ஆதாரங்கள் கிடைத்தும் அவற்றைப் பாதுகாக்காமல் தவறவிட்டதன் மூலம் தமிழர்களுக்கு உலக சமுதாயம் பெருந்துரோகம் செய்துள்ளது. இனியும் அத்தகைய துரோகங்களை ஈழத்தமிழருக்கு பன்னாட்டு சமுதாயம் இழைக்கக் கூடாது.

இலங்கையில் போர்க்குற்றங்கள் நடைபெற்றமையை ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் விசாரணைக் குழு உறுதி செய்துள்ளது. எனினும், அதனடிப்படையில் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தருவதற்கான நீதிமன்ற விசாரணையை இலங்கை அரசு இன்னும் தொடங்கவில்லை. இந்த நிலையில், மன்னாரில் தமிழர்களின் எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றமை அங்கு இனப்படுகொலை நடந்ததை உறுதி செய்துள்ளது.

இது குறித்து விசாரணை நடத்தி, ஈழத்தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கொடும் குற்றங்களை ஆவணப்படுத்த, சர்வதேச அளவில் நடுநிலையான, சுதந்திரமான விசாரணை அமைப்பை உருவாக்க வேண்டும். அந்த அமைப்பு ஆவணப்படுத்தும் ஆதாரங்களின் அடிப்படையில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணைக்கு உட்படுத்த இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

## பெண்புலியை கொன்று உணவாக்கிய ஆண்புலி



மத்திய பிரதேசத்தில் உள்ள தேசிய பூங்காவில் பெண் புலியை ஆண் புலி கொன்று உண்ட விசித்திர சம்பவம் அரங்கேறி உள்ளது.

மிருகங்கள் தனது இனத்தை அடித்து கொன்று சாப்பிடும் வழக்கம் உள்ளது. ஆனால் புலிகள் இனத்தில் அத்தகைய நடைமுறை இல்லை. ஆனால் அபூர்வமாக புலி தனது இனத்தைச் சேர்ந்த மற்றொரு புலியை அடித்து கொன்று தின்ற சம்பவம் நடந்துள்ளது.

மத்தியபிரதேச மாநிலத்தில் முந்திதாதர் என்ற இடத்தில் காங்கா தேசிய பூங்கா உள்ளது. இங்கு சிங்கம், புலி, கரடி, யானைகள் உள்ளிட்ட பல வகையான மிருகங்கள் உள்ளன.

இந்த நிலையில் அங்கு இன விருத்திக்காக ஒரு பெண் புலியை ஆண் புலியுடன் சேர்த்து அடைத்து வைத்திருந்தனர். ஆனால் பெண் புலியை அந்த ஆண் புலி அடித்துக் கொன்றது.

மேலும் அதன் இறைச்சியை சாப்பிட்டது. பூங்கா ஊழியர்கள் பார்த்தபோது பெண் புலியின் மண்டை ஓடும், அதன் கால்களின் பாதங்கள் மட்டுமே எஞ்சி இருந்தன.

இந்த தகவலை தேசிய பூங்காவின் இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.


## இஷா அம்பானியின் தாலி விலை தெரியுமா?

மும்பை,ஜன.22

இஷா அம்பானியின் தாலி விலை எவ்வளவு என்பது குறித்த விவரம் வெளியாகி பலரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இந்தியா மட்டுமன்றி உலகளவில் பணக்காரர்கள் வரிசையில் இருப்பவர் ரிலையன்ஸ் குழுமத் தலைவர் முகேஷ் அம்பானி. இவரின் மகள் இஷா – ஆனந்த் பிரமால் திருமணம் சமீபத்தில் மும்பையில் மிகப் பிரமாண்டமாக நடந்தது.

ஆசியாவிலேயே விலை உயர்ந்த திருமணம் என சாதனையை இத்திருமணம் பெற்றுள்ளது. திருமணத்துக்காக ரூ.700 கோடி (இந்திய மதிப்பில்) செலவு செய்யப்பட்டது என கூறப்படுகிறது.



இந்நிலையில் இாவின் தாலி மதிப்பு விவரம் தற்பொழுது வெளிவந்துள்ளது. தாலியின் மதிப்பு 90 கோடி ரூபாய் (இந்திய மதிப்பில்) என கூறப்படுகிறது.

## பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டி ஏவுகணைகளை பிரான்ஸிடமிருந்து வாங்கும் இந்திய ராணுவம்

பிரான்ஸில் இருந்து மூவாயிரம் பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டி ஏவுகணைகளை வாங்க இந்திய ராணுவம் திட்டமிட்டு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

எதிரி நாடுகளின் பீரங்கி படைகளுக்கு எதிராக காலாட்படை ஆயுதங்களை உயர்த்துவதற்கு வெளிப்படையான முயற்சியில், இந்திய ராணுவம் ஈடுபட்டு உள்ளது. பிரான்ஸில் இருந்து 3,000 மிலன் 2டி பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டி ஏவுகணைகளை வாங்க இந்திய ராணுவம் திட்டமிட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் ரூ1,000 கோடிக்கு மேல் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாரத் டைனமிக்ஸ் லிமிடெட் (BDL) ஒரு பிரெஞ்சு நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்து, இரண்டாம் தலைமுறை மிலன் 2டி பீரங்கி எதிர்ப்பு ஏவுணைகள் 3,000இற்கும் அதிகமாக வாங்க பாதுகாப்பு அமைச்சகத்தின் உயர் மட்டக் கூட்டத்தின் விவாதத்தின் போது இது தொடர்பான திட்டம் முன்வைக்கப்பட்டது. இதுபற்றி ஏஎன்ஐ செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டு உள்ளது.

இந்திய ராணுவத்தில் சுமார் 850 வகையான ஏவுகணைகள் உள்ளன. சுமார் 70,000 பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டி ஏவுகணைகள் தேவைப்படுகின்றன.

தற்போதுள்ள மிலன் – 2டி மற்றும் கொங்கர் பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டி ஏவுணைகளை விட மூன்றாம் தலைமுறை பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டி ஏவுகணைகளை வாங்க நீண்ட காலமாக இந்திய ராணுவம் திட்டமிட்டுள்ளது.

# சிரியாவில் உள்ள ஈரானின் இலக்குகளை தாக்க தொடங்கியது இஸ்ரேல் ராணுவம்

லண்டன்,ஜன.22

சிரியாவில் உள்ள ஈரானின் இலக்குகளை தாங்கள் தாக்கத் தொடங்கிவிட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதலில் 11 பேர் உயிரிழந்துள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரானிய புரட்சிப் படையின் சிறப்பு பிரிவான குட்ஸ் படைக்கு எதிராக தங்களின் தாக்குதல் நடவடிக்கை அமைந்ததாக இஸ்ரேல் பாதுகாப்பு படைப் பிரிவு (IDF) கூறியுள்ளது.

மேலும், இது குறித்து எந்த தகவலையும் இஸ்ரேல் ராணுவம் தெரிவிக்கவில்லை. ஞாயிற்றுக்கிழமையன்று



சிரியாவில் உள்ள கோலான் மலைப் பகுதி உச்சியில் உள்ள இலக்குகளில் இருந்து ஏவப்பட்ட ஒரு ராக்கெட்டை தாங்கள் இடைமறித்ததாக இஸ்ரேல் பாதுகாப்பு படை பிரிவு தெரிவித்தது.

இதேவேளை, நாட்டின் வான் பாதுகாப்பு பிரிவு இஸ்ரேலிய வான்வழி தாக்குதல் ஒன்றை முறியடித்துள்ளதாக சிரியாவின் அரசு ஊடகமான சனா குறிப்பிட்டுள்ளது.

நேற்று தான் வெளியிட்ட டுவிட்டர் செய்தியில், "சிரியா பிராந்தியத்தில் ஈரானைச் சேர்ந்த குட்ஸ் படைகளின் இலக்குகளைத் தாக்க தொடங்கிவிட்டோம்" என்று தகவல் வெளி யிட்டுள்ளது.

இதற்கிடையே ஞாயிற்றுக்கிழமையன்று சாட் நாட்டுக்கு சென்றுள்ள இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூ ஓர் எச்சரிக்கை விடுத்தார்.


சிரியாவில் மூர்க்கத்தனமாக செயல்பட்டு கொண்டிருக்கும் ஈரான் குழுவை இலக்காகக் கொள்ளவும், எங்கள் நாட்டுக்கு தீங்கு விளைவிக்கும் எவரையும் அழித்திடும் பணியில் ஈடுபடவும் நாங்கள் கொள்கை வகுத்துள்ளோம், என்று கூறினார். இதுவரை சிரியாவில் தாங்கள் நடத்திய தாக்குதல்கள் குறித்து மிகவும் அபூர்வமாகத்தான் இஸ்ரேல் ஒப்புக் கொண் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலகின் அழகான 'பூ' இறந்ததால் அதிர்ச்சி

வொஷிங்டன்,

உலகின் அழகான நாய் என கருதப்படும் 'பூ' உடல்நலக்குறைவால மரணமடைந்த சம்பவம் பலரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

சமூக வலைதளத்தில் மிகவும் பிரபலமான பூ என்ற நாய்க்கு உலகம் முழுவதும் விசிறிகள் இருக்கிறார்கள். இதுதான் உலகின் மிக அழகான நாய் என பெயர்பெற்றது. இந்த நாயை சமூக வலைதளத்தில் லட்சக்கணக்கானோர் பின்தொடருகின்றனர்.



இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன் அந்த நாய் இறந்தது. 12 வயதான 'பூ' தூங்கிக்கொண்டிருந்த போது இதயம் வெடித்து உயிரிழந்ததாக அதன் உரிமையாளர்கள் தெரிவித்தனர். 'பூ'வின் நெருங்கிய நண்பனாக விளங்கி வந்த புட்டி என்கிற நாய் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் இறந்தது குறிப்பிடத்தக்கது.

## மாலியில் பயங்கரவாதிகள் தாக்குதல்; ஐ.நா அமைதிப்படை வீரர் 10 பேர் பலி

பமாக்கோ,ஜன.22

*மாலி நாட்டில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படை முகாம் மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 10 வீரர்கள் உயிரிழந்தனர் என்றும், 25 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் ஐ.நா தகவல் தெரிவித்தது.*

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியின் வடக்கு பகுதியை 2012 ஆம் ஆண்டு மத அடிப்படையிலான பயங்கரவாதிகள் கைப்பற்றினர். அவர்களை 2013 ஆம் ஆண்டு பிரெஞ்சு படையினர் விரட்டியடித்தனர்.

ஆனாலும் மாலியில் தொடர்ந்து உள்நாட்டு போர் நடந்து வருகிறது. அங்குள்ள பயங்கரவாத குழுவினர் பிரபல அரசியல்வாதிகள், அமைச்சர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் செல்வந்தர்கள் தங்கியிருக்கும் இடங்களின்மீது அதிரடியாக தாக்குதல் நடத்தி வந்தனர்.



இதனால், மாலியில் பயங்கரவாதச் செயல்களை ஒழிக்கவும், அமைதியை நிலைநாட்டவும் பிரசாரம் செய்வதற்காக ஐ.நா. அமைதிப்படை வீரர்கள் சுமார் 13 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அங்கு முகாமிட்டுள்ளனர்.

இந்நிலையில் மாலி நாட்டின் வடக்கு பகுதியில் அகுவெல்ஹோக் என்ற இடத்தில் உள்ள ஐ.நா. அமைதிப்படை முகாம்மீது ஆயுதமேந்தி வந்த மர்ம நபர்கள் தாக்குதல் நடத்தினர். இதில் ராணுவ வீரர்கள் 10 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும், 25 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் ஐ.நா. தகவல் தெரிவித்துள்ளது.

## சந்திரனில் மனிதர்கள் தங்க குடியிருப்புகள் கட்ட முயற்சி

### சீனாவுடன் இணைந்து ஆய்வு நடத்தும் நாசா

வொஷிங்டன்,ஜன.22

சந்திரனில் மனிதர்கள் தங்குவதற்கு வசதியாக குடியிருப்புகள் அமைக்க சீன தேசிய விண்வெளி நிர்வாகத்துடன் இணைந்து ஆய்வு நடத்த நாசா திட்டமிட்டுள்ளது.

சந்திரனில் சீனா தீவிர ஆய்வு மேற்கொண்டுள்ளது. சந்திரனின் இருட்டு பகுதியில் ஆராய்ச்சி செய்ய 'சாங்-இ4' என்ற விண்கலத்தை அங்கு அனுப்பியுள்ளது. அந்த விண்கலம் இம்மாத தொடக்கத்தில் வெற்றிகரமாக தரை இறங்கியது.

அதைத் தொடர்ந்து தற்போது அமெரிக்காவும் சந்திரனில் மீண்டும் தனது ஆய்வைத் தொடர ஆர்வமாக உள்ளது. அதை சீனாவுடன் இணைந்து நடத்த திட்டமிட்டுள்ளது. அதற்கான ஆலோசனையை சீன தேசிய விண்வெளி நிர்வாகத்துடன் சமீபத்தில் 'நாசா' நடத்தியது.

அப்போது சந்திரனில் மனிதர்கள் தங்குவதற்கு வசதியாக குடியிருப்புகள் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பூமியில் இருந்து வேறு கிரகத்தில் மனிதர்களை குடியமர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கு முன்னோடியாக அடுத்த ஆண்டு அதாவது 2020 ஆம் ஆண்டு தொடக்கத்தில் சந்திரனுக்கு 'ரோபோ'வை அனுப்ப நாசா முடிவு செய்துள்ளது.

## மீளவும் சர்ச்சையில் சிக்கினார் இங்கிலாந்து இளவரசர் பிலிப்

லண்டன்,ஜன.22

இங்கிலாந்து ராணி எலிசபெத்தின் கணவர் விபத்தில் சிக்கிய 2 நாள்களுக்கு பிறகு மீண்டும் சீட் பெல்ட் அணியாமல் கார் ஓட்டிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



இங்கிலாந்து ராணி எலிசபெத்தின் கணவர் இளவரசர் பிலிப் (97). இவர் நார்போக் பகுதியில் 2 நாள்களுக்கு முன்பு 'லேண்ட் ரோவர்' காரை தனியாக ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்தினார்.

அதில் எதிரே மற்றொரு காரில் வந்த 2 பெண்கள் காயம் அடைந்தனர். இந்த விபத்தில் இளவரசர் பிலிப் காயமின்றி உயிர் தப்பினார். அப்போது அவர் 'சீட் பெல்ட்' அணியாமல் இருந்தார்.

இந்த சம்பவம் சர்வதேச அளவில் பரபரப்பை ஏற்படுத்தியது. இது அடங்கும் முன்பு கடந்த சனிக்கிழமையும் இவர் 'சீட் பெல்ட்' அணியாமல் காரை ஓட்டினார்.

சாண்டரிங்காம் பகுதியில் புதிய லேண்ட் ரோவர் காரை ஓட்டிச்சென்ற அவரை பொலிஸார் பார்த்தனர். இளவரசர் என தெரிந்ததும் அவரை வழி மடக்கி தடுத்து நிறுத்தினர். பின்னர் 'சீட் பெல்ட்' அணியும்படி அறிவுறுத்தினர். இந்த வீடியோ காட்சி சமூக வலைதளங்களில் வைரலாக பரவி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அதன் மூலம் மீண்டும் அவர் சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

சிரிய விவகாரம் தொடர்பில்

## பேச்சு மூலம் தீர்வு; ட்ரம்ப் - எர்டோகன் உடன்பாடு

சிரியா விவகாரம் தொடர்பாக பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கு, அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் மற்றும் துருக்கி ஜனாதிபதி எர்டோகன் ஒப்புதல் அளித்துள்ளனர்.

சிரியாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள ஐஎஸ் பயங்கரவாத இயக்கத்தை தோற்கடித்துவிட்டதாக அறிவித்த அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், அங்கிருந்து அமெரிக்கப் படைகளை திரும்ப பெறுவதாக அறிவித்தார். அதனையடுத்து, அமெரிக்கப் படையினர் சிரியாவில் இருந்து வெளியேறத் தொடங்கி உள்ளனர்.

இதையடுத்து, வடக்கு சிரியாவில் அமெரிக்காவின் ஆதரவுடன் செயல்படும் குர்து போராளிகள் மீது தாக்குதல் தொடுக்க தயாராகி வருகிறார்கள் என துருக்கி தெரிவித்துள்ளது. இவ்வாறு தாக்குதல் நடத்தும்பட்சத்தில் அமெரிக்காவும் துருக்கியும் மோதும் நிலை ஏற்படும்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பும், துருக்கி ஜனாதிபதி தாயிப் எர்டோகனும் தொலைபேசி வாயிலாக பேசினர். அப்போது, வடகிழக்கு சிரியாவில் உள்ள பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு காண இருவரும் ஒப்புக் கொண்டனர்.

இதுதொடர்பாக வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

'சிரியாவில் எஞ்சியுள்ள பயங்கரவாத சக்திகளை தோற்கடிப்பதன் முக்கியத்துவம் குறித்து டிரம்ப் குறிப்பிட்டுள்ளார். வடகிழக்கு சிரியா மற்றும் எல்லைப்பகுதியில் பாதுகாப்பு இலக்கை அடைவதற்காக தொடர்ந்து பேச்சு நடத்த இரு நாட்டின் தலைவர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

மேலும், அமெரிக்கா, துருக்கி இடையிலான வர்த்தக உறவை மேம்படுத்துவது



உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் தொடர்பாகவும் ஆலோசித்தனர்' என கூறப்பட்டுள்ளது.

## எம்மை மற்றவர்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவோம்

# எமது பயண இலக்கு மக்கள் நலம் என்ற இலக்காகவே அமையும்!

## தமிழ் மக்கள் கூட்டணி அங்குரார்ப்பண வைபவத்தில் நீதியரசர் விக்கி முழக்கம்

**தமிழ் மக்கள் கூட்டணி அங்குரார்ப்பண மத்திய குழுக் கூட்டம் செயலாளர் நாயகம் சி.வீ.விக்னேஸ்வரனின் வாசஸ்தலத்தில் (232, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்) 20ஆம் திகதியன்று (பௌர்ணமி தினம்) காலை 10 மணிக்கு நடைபெற்றபோது அவர் ஆற்றிய உரை இங்கு முழுமையாக பிரசுரமாகியுள்ளது.**



அசுரர்களை அழிக்க முருகனுக்கு அம்மன் வேல் கொடுத்த தைப்பூசநன்னாளின் முதல் நாள் பௌர்ணமியில் தமிழ் மக்கள் கூட்டணியின் உத்தியோகபூர்வ அங்குரார்ப்பண மத்திய குழு கூட்டத்தில் கூடியுள்ளோம்.

எம் கட்சி இருள் நீக்கி ஒளியைப் பரப்ப வேண்டும் என்று எமக்கு அருகிலுள்ள நல்லூர் முருகனை மனதார வேண்டிக் கொண்டுஎன்பேச்சைத்தொடங்குகின்றேன்.

பரம மண்டலத்தில் இருக்கும் எமது பிதாவின் ஆசியுடன் அன்புடன் என் பேச்சைத் தொடங்குகின்றேன்.

நாம் மிகப்பெரிய சவால்களுக்கு மத்தியில் தமிழ் மக்கள் கூட்டணியை தொடங்கியுள்ளோம். ஒருபுறம் எமது மக்கள் கடந்த 30 வருட கால போர்த் தாக்கங்களில் இருந்து இன்னமும் மீண்டுவர முடியாத நிலையில் இருக்கின்றார்கள். மறுபுறத்தில் ஏற்கனவே காணப்படும் கட்சிகள் எமது மக்களைப் பிரதிநிதித்துவஞ் செய்வதாகக் கூறி, போலி வாக்குறுதிகளை வழங்கிவிட்டு அரசாங்கங்களுக்கு சேவகம் செய்து பதவிகளையும் சலுகைகளையும் பெறுவதே இலக்காக கொண்டு செயற் பட்டு வருகின்றார்கள். இதனால் மக்கள் ஏமாற்றமும் சலிப்பும் அடைந்திருக்கின்றார்கள்.

இவ்வாறான ஒரு சூழலிலேயே எமது கட்சி ஒரு சிறு குழந்தையாகப் பிரசவிக்கப்பட்டுள்ளது. இந்தக்குழந்தைவிரைவாக எழுந்து நடந்து எம்மக்களின் வேலாகி பாதுகாப்புக் கவசமாகவும் அவர்களின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யும் சக்தியாகவும் பரிணாமம் பெறுவது அவசியம். அதன் எதிர்காலம் உங்கள் கைகளிலேயே தங்கி இருக்கின்றது.

மத்திய குழு உட்பட கட்சியின் ஏனைய அமைப்புக்களில்உறுப்பினர்கள்முழுமையாக இன்னமும் நியமனம் செய்யப்படாமல் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் மத்திய குழுவில் 80 சதவீதத்துக்கும் அதிகமான நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொறுப்புக்களும் ஒப்படைக்கப்பட் டுள்ளன. கட்சி ரீதியான செயற்பாடு கள் இன்று முதல் ஆரம்பமாகிவிரிவடைந்துசெல்லும்போது பொருத்தமானவர்களை இனம் கண்டு உறுப்பினர்கள் அனைவரையும் அந்தந்தக் குழுக்களுக்கு நாம் மிக விரைவிலேயே நியமிக்க முடியும் என்று நம்புகின்றேன்.

இன்று முதல் நீங்கள் அனைவரும் அர்ப்பணிப்புடனும் துடிப்புடனும் எமது மக்களின் துயரங்களை நீக்குவதற்கும் மற்றும் அவர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கும் கட்சியில் ஓடாக நின்று பணியாற்றுவீர்கள் என்று நம்புகிறேன்.

இந்தக் கட்சியை ஏன் தொடங்க வேண்டியிருந்தது என்பது சம்பந்தமாகக் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் தமிழ் மக்கள் பேரவையில் நான் ஆற்றிய உரையில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றேன். கட்சியின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் பற்றி எமது யாப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இன்று எமது யாப்பானது இங்கு வாசித்துக் காட்டப்படும். குறிக்கோள்களை அடைவதற்கு உரிய வழிபடங்களை வரைந்து, உபாயங்களை வகுத்து, நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை நாம் முன்னெடுக்கவேண்டும். நோக்கு, உபாயம், செயற்பாடு என்ற மூன்றும் திடமாக வகுக்கப்பட்டு நடைமுறைப் படுத்தினால்தான் எமது பயணம் வெற்றியடையும். எமது செயற்பாடுகள் தூர நோக்கும், தெளிந்த சிந்தனையும், அரசியல் சாணக்கியமும் கொண்டவையாக அமையவேண்டும். எமது கட்சி மக்களால் வலுப்படுத்தப்பட்ட ஒரு கட்சியாகவும் அடிமட்ட மக்களின் ஆதரவில் தங்கியுள்ள கட்சியாகவும் கட்டியெழுப்பப்படுவதிலேயே எமது வெற்றி தங்கி இருக்கிறது. எமது மக்கள் தான் இந்தக் கட்சியை வழிநடத்தி செல்ல வேண்டும்.

அன்றொருநாள் என்னை வெளியேற்றச் சதிகள் செய்யப்பட்ட போது ‘நான் உங்களுடன் நிற்பேன்’ என்று என் மக்களுக்கு நான் கொடுத்த என் வாக்குறுதியே இன்று ஒரு கட்சியாகப் பரிணாமம் பெற்றுள்ளது. ஆகவே எம் மக்களின் சிந்தனைகள், ஆலோச னைகள் தாம் எம்மைப் பலப்படுத்த வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டே எமது கட்சி அடிமட்டத்தில் இருந்து கட்டி எழுப்பப்படும் ஒரு நிறுவன அமைப் பைக் கொண்டிருக்கின்றது.

எமது சமூகத்தின் அடிமட்டத்தில் உள்ள மக்களின் பிரச்சினைகளை எவ்வாறு நாம் தீர்க் கலாம், எவ்வாறு எல்லா மட்டங்களிலும் உள்ள சமூக அலகுகளை நாம் பிரதிநிதித்துவஞ் செய்யலாம், எவ்வாறு அவர்களை உள்வாங்கி செயற்படலாம் என்ற கேள்விகளை நாம் அடிக்கடி எம்முள்ளேயே கேட்க வேண்டும். அவற்றை அவ்வாறு எழுப்பி உங்கள் செயற்பாடுகளை நீங்களே எம்முடன் கருத்துப் பரிமாறி நெறிப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றேன்.

ஒழுக்கமும், துடிப்பும், சமூக சிந்தனையும் உள்ள இளைஞர், யுவதிகளை, பல்கலைக்கழக மாணவர்களை, முன்னாள் போராளிகளை எம்முடன் இணைத்து செயற்படவேண்டும் என் பதில் நான் கரிசனை காட்டி வருகின்றேன். எம்முடன் இணைந்துள்ள இளைஞர், யுவதிகள், பல்கலைக்கழக மாண வர்கள் காலக்கிரமத்தில் பலவற்றைச் சாதித்து காட்டுவார்கள் என்றும் பல விடயங்களில் முன்னுதாரணமாக நடந்து காட்டுவார்கள் என்றும் நான் திடமாக நம்புகின்றேன். என்னைப் போன்றவர்களின் வாழ் காலம் எத்தருணத்திலேனும் முடிவுக்கு வரக் கூடிய உச்சத்தை எட்டியுள்ளது. அடுத்து வரும் தமிழ்த் தலைமைகள் ஒழுக்கம், அர்ப்பணிப்பு, சமூகச் சிந்தனை கொண்டவர்களாக சுயநலம் களைந்தவர்களாக மிளிர வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு.

சமூகத்தின் பல்வேறு மட்டங்களையும் சேர்ந்த வேறுபட்ட சிந்தனைகளைக் கொண்ட பலரும் ஒரு கொள்கை அடிப்படையில் இந்தக் கட்சியில் ஒன்று சேர்ந்திருக்கின்றோம். ஆனால், கொள்கை ஒன்றென்றாலும் எமது தாகங்கள் வித்தியாசம், வேகங்கள் வித்தியாசம், சூழல்கள் வித்தியாசம். ஆகவே எமது செயற்பாடுகளுக்குள்ளே முரண்பாடுகள் ஏற்படக்கூடும், கருத்துவேற்றுமைகள் ஏற்படக்கூடும், சலிப்பு ஏற்படக்கூடும், ஏமாற்றம ; வரக் கூடும், நம்பிக்கையீனம் ஏற்படக்கூடும். இந்தச் சவால்களை எல்லாம் கண்டு துவளாமல் அவற்றையெல்லாம் வெற்றிகரமாகக் கடந்து எமது மக்களின் சுபீட்சமான எதிர்காலத்தை உறுதிசெய்யும் நாளைய தலைவர்களாக நீங் கள் மிளிர்வீர்கள் என்று நம்புகின்றேன். இங்குள்ளவர்களில் வயதில் மூத்தவன் என்ற அடிப்படையில் இவ்வாறான அறை கூவலை விடுக்க நான் தகுதியு டையவன் என்று நினைக்கின்றேன்.

எமது கட்சியின் குறிக்கோள்களை அடைவதற்கான வழிபடங்களை வகுக்கும் கூட்டங்கள் மற்றும் சந்திப்புக்களை விரைவில் நாம் ஒழுங்குசெய்வோம். உங்கள் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை அப்போது எதிர்பார்க்கின்றேன். முக்கியமாக மக்கள் என்ன சொல்கின்றார்கள் என்பதை அறிந்து சொல்லுங்கள். நிலத்தில் காதுவைத்து எமது பயணத்தைத் தொடர்வது அவசியம்.

நாம் தனியே தேர்தல் அரசியலுடன் நின்றுவிடக் கூடாது. சிலருக்குத் தேர்தலும், தேர்வும், அது வழியே வரும் அதிகாரங்களும் பதவிகளுமே முக்கியம். எம்மைப் பொறுத்தவரையில் எமது கொள்கைகளை வலுவாக மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வது முக்கியம். எமது கொள்கைகள் எமது மக்களின் நீண்ட கால நலம் கருதியவை. ஆகவே நாங்கள் குறுகிய மற்றும் நீண்ட காலத் திட்டங்களை வகுத்து அவற்றின் அடிப்படையில் செயற்படுவது முக்கியம். நாம் எம்மை மற்றவர்களிலிருந்து வேறு படுத்திக் காட்ட வேண்டும். எமது பயணம் மக்கள் நலம் என்ற இலக்கு நோக்கிய பயணமாக அமைய வேண்டும். அந்தப் பயணமே எமது தனித்துவத்தை உலகுக்குப் பறை சாற்ற வேண்டும்.

நாம் எமது அரசியல், சமூக, பொருளாதாரக் கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டுசெல்லும்போது மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். எமது கருத்துக்கள் சரியானவையாகவும் மக்களைத் தெளிவுபடுத்துபவைகளாகவும் வலுப்படுத்துபவைகளாகவும் இருக்கவேண்டும்.

உதாரணத்திற்கு எமது மக்களுட் சிலர் ‘நாங்கள் உங் களுக்கு வாக்குகளை அளித்தால் நீங் கள் எங்களுக்கு எதைத் தருவீர்கள்?’ என்று கேட்பார்கள். அவர்கள் கட்சிகளி டம் இருந்து பிச்சை கேட்டே பழகிப் போனவர்கள். கட்சிகளும் பிச்சை போட்டு பிச்சை கேட்கும் பழக்கத்திற்கு ஆளானவர்கள். அவர்களிடம் வடகிழக்கு ஒருங்கிணைப்பு, சமஷ்டி அரசியல் யாப்பு போன்றவை எடுபடா. அவற்றைப் புரிந்து கொள்ளும் மனோநிலை கூட அவர்களுள் பலரிடம் இல்லை. எனவே அவர்கள் வழி சென்று அவர்களுக்கு வருங்காலம் பற்றியும் எமது நீண்டகாலக் கொள்கைகளின் அவசியம் பற்றியும் எடுத்துக் காட்ட வேண்டும். அதே நேரம் அவர்களின் நாளாந்தத் தேவைகளையும் பூர்த்திசெய்ய வேண்டும்.

அதேபோல, அரசியல் தொடர்பில் ஊடகங்கள் மற்றும் ஏனையவர்களுடன் கருத்துக்களைப் பகிரும்போது மிகவும் அவதானமாக இருந்துகொள் ளுங்கள். கட்சிக்கு என்று உத்தியோக பூர்வ பேச்சாளர் ஒருவர் இருக்கின்றார். அவர் மிகக் கவனமாக சிந்தித்துச் செயற்படக் கூடியவர் ஆதலால் கட்சி சார்ந்த கருத்துக்களை உங்கள் எண்ணப்படி பேசி சர்ச்சைகளில் சிக்குவதை தவிர்த்துக் கொள்ளுமாறு உங்களை அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன். சில கேள்விகளுக்குப் பதில் நீங்கள் சொல்லியே ஆக வேண்டும் என்றில்லை. அவற்றிற்கான பதில்களைக் கட்சியின் தலைமைகள் கூற விடுவதில் தவறில்லை. அரசியல் ரீதியாக நடத்தப்படும் சில ஊடகங்கள் எங்கள் மீது சேறு பூசக் காத்து நிற்பதை நீங்கள் மறந்து விடக் கூடாது. எப்பொழுதும் அவதானமாக இருக்க நாங்கள் பழகிக் கொள்ள வேண்டும்.

எமது மத்திய குழுவில் பலவிதமான தொழில்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவோரை உள்ளடக்கியுள்ளோம். விவசாய ஒன்றியத்தலைவர், மீனவ சங்கத் தலைவர், வைத்தியர், சட்டத்தரணி, பொறியியலாளர், கட்டடக் கலைஞர், ஆசிரியர்கள், பேராசிரியர்கள், தொழிற்சங்க வாதிகள், கூட்டுறவாளர் கள், பத்திரிகையாளர்கள் என்று பலரும் எம்முடன் சேர்ந்து பயணிக்க முன்வந் துள்ளார்கள். பால்நிலை மற்றும் இளைஞர் யுவதிகள் சார்ந்த பிரதிநிதித்துவங்களை வலுவேற்றி வருகின்றோம். எவ்வாறு தமிழ் மக்கள் பேரவை ஒரு மக்கள் இயக்கமாக நடைமுறையில் உள்ளதோ அதேவாறான சகல மட்ட மக்களினதும் ஆதரவும் எமக்குக் கிடைத்து வருகின்றது.

SWRD பண்டார நாயக்க அவர்கள் 1956ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிடியை அரசியலில் தளர்த்த ஐவகையானோரைத் தனக்கு ஆதரவாளர்கள் ஆக்கினார். கமக்காரர், மீனவர், ஆசிரியர், சுதேச வைத்தியர்கள் மற்றும் பௌத்த சங்கத்தினரைத் தம்முடன் இணைத்து வெற்றி வாகை சூடினார். நாம் மேற்கூறிய பதினொரு வகையானோரை எமது ஆதரவாளர்களாக ஆக்கியுள்ளோம். ஆகவே எந்தத் தேர்தல் ஆனாலும் எமக்கு வெற்றி நிச்சயம்!

நாம் எமது கட்சியின் யாப்பைத் தயாரித்து விட்டோம். உங்கள் ஒவ்வொருவரிடமும் பிரதிகள் தருவதாக இருந்தது. அதில் சற்றுத் தாமதம் ஏற்பட்டுள்ளதால் நாங்கள் எமது யாப்பை இந்தக் கூட்டத்திலேயே உங்கள் அனுசரணையுடன் ஏற்க முடிவெடுத்துள்ளோம். அதை சற்று நேரத்தில் அருந்தவபாலன் அவர்கள் முழுமையாக வாசிப்பார். அந்தந்த மாவட்டப் பிரிவுகளின் ஏற்பாட்டாளர்கள் முழுமையாக நியமிக்கப்படாவிட்டாலும் நிய மிக்கப்பட்டோர் பெயர்கள் இப்பொழுது வாசித்துக் காட்டப்படும்.

இன்று ஒரு பத்திரிகை எமது கட்சியில் ஜனநாயகம் பேணப்படுமா என்று கேள்வி கேட்டிருந்தது. கட்டாயம் பேணப்படும் என்பதை இப்பொழுதே கூறி வைக்கின்றேன். ஆனால் முதல் வருடத்தில் இவ்வாறான நியமனங்கள் செயலாளர் நாயகத்தினாலேயே செய்யப்படுவன. அடுத்த வருடம் தொடக்கம் யாப்பின் அடிப்படையில் வட்டாரம், தொகுதி, மாவட்டம் என்ற அடிப்படையில் கீழிருந்து நியமனங்கள் செய்யப்பட்டு அவ்வாறு வருபவர்கள் பொதுக் குழுவினுள் உள்ளடக்கப்படுவார்கள். பொதுக்குழு மத்திய குழுவைத் தேர்ந்தெடுக்கும். அப்போது என்னை செயலாளர் நாயகமாக நீங்கள் ஏற்க மறுத்தால் உங்கள் ஜனநாயக உரிமையே நடைமுறைப்படுத்தப்படும்.

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
**ஸ்தாபகரும் செயலாளர் நாயகமும்**
**தமிழ் மக்கள் கூட்டணி**

# வடக்கு - கிழக்கு இணைப்பு அவசியம் முஸ்லிம்களுக்கு தனியலகு கட்டாயம்

## இதுவே தமது நிலைப்பாடு என்கிறார் விக்கி

யாழ்ப்பாணம், ஜன. 22

வடக்கு - கிழக்கு இணைக்கப்படவேண்டும். முஸ்லிம் மக்களுக்கு முஸ்லிம் அலகொன்று கட்டாயம் கொடுக்கப்பட வேண்டுமென்பது எங்கள் கட்சியின் தீர் மானம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன்.



நேற்றுமுன்தினம் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின்னர் அவர் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய செவ்வியின் மிகுதிப் பகுதி வருமாறு:

**கேள்வி**- எதிர்கால அரசியலில் புளொட் உங்க ளுடன் இணைந்து பயணிக்கவுள்ளதாகச் சொல் லப்படுகிறதே?

**பதில்** - அதாவது எந்தக் கட்சியையும் பிளவுபடச் செய்வதற்கு எங்களுக்கு விருப்பம் இல்லை. ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியன ஏற்கனவே கூட்டமைப்பில் இருந்து வெளியேறி வந்தவர்கள்.

ஆகவே அவர்கள் எங்களோடு சேர்ந்து பயணித் தால் அது கூட்டமைப்பை உடைப்பது போன்று அமையாது. ஆனால் எந்தவகையிலும் தற்போது இருக்கும் கூட்டமைப்பை உடைக்கவேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை.

தமிழரசுக் கட்சியோடு சேர்ந்த மற்றக் கட்சிகளை உள்ளடக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எந்தவகையிலும் பாதிக்காத வகையில்தான் எங் கள் நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம். அந்த விதத்தில் கூட்டமைப்பில் தம்பி சித்தார்த்தனின் கட்சி இருப்பதால் அந்தக் கட்சி வெளியில் வந்து எங் களோடு சேர்ந்து கொள்வது எங்களுக்குச் சரி யென்று படாது.

இதுவரை சித்தார்த்தன் வெளியில் வரவில்லை. இப்பவும் கூட்டமைப்பில்தான் இருக்கிறார். கூட்ட மைப்பை உடைக்க எங்களுக்குப் பிரியம் இல்லை என்று சொன்னால் அவரும் வரமாட்டார். நாங்களும் கேட்கமாட்டோம். ஆனால் அவர் ஒருவேளை எங்க ளோடு கொள்கை ரீதியாக இணைந்து செல்லலாம். ஆனால் கட்சி ரீதியாக வரவேண்டிய அவசியம் அவருக்கும் இல்லை. வருமாறு கேட்கவேண்டிய அவசியம் எனக்கும் இல்லை.

**கேள்வி**- அவ்வாறாயின் தேர்தல் கூட்டுக்குள் அவர்கள் வந்தால் இணைத்துக் கொள்ளும் சாத்தி யம் உள்ளதா?

**பதில்** - அவ்வாறு தேர்தல் கூட்டாக வருவதென் றாலும் கூட்டமைப்பை உடைத்துக் கொண்டு வரவேண்டியிருக்கும். அவ்வாறு கூட்டமைப்பை உடைப்பதில் எங்களுக்குப் பிரியம் இல்லை. நாங்கள் கூட்டமைப்பை உடைக்கமாட்டோம். எங்களுக்கு உடைக்கவேண்டிய அவசியமும் இல்லை.

நாங்கள் எமது கட்சியைக் கொள்கை ரீதியாகத் தான் முன்னகர்த்திச் செல்கின்றோம். அந்தக் கொள்கைகளை மக்கள் ஏற்றுக் கொள்வார்களா என்பதுதான் முக்கியமான விடயம். ஆனால் நாங் கள் எங்களது கொள்கைகளைத் தமிழ் மக்களி டையே பரப்புகின்றோம்.

**கேள்வி**- தமிழ் மக்கள் பேரவையில் உள்ள கட்சிகளின் ஆதரவு உங்களுக்கு இருக்கிறதா?

**பதில்** - கொள்கை ரீதியாக ஒருமித்த பயணத்தை ஏற்றுக் கொண்டுள்ளதால் அவர்கள் வந்து எம்முடன் சேர முடியும். அவ்வாறு சேர்ந்தால் நல்லது. கடை விரித்தோம் .கேட்பார்கள் வருவார்கள் என்று பட்டி னத்தார் சொன்னமாதிரி நாங்கள் கடை விரித்தி ருக்கிறோம் வருகின்றவர்கள் வரலாம் இல்லையென் றால் வராமலும் விடலாம்.

**கேள்வி** - அரசமைப்பு தொடர்பில் ஊடகங்கள் பொய்யான பரப்புரைகளைச் செய்கின்றன என நம்புகிறீர்களா?

**பதில்**- அது எனக்குத் தெரியாது. ஆனால் கூட்டமைப்பு சொல்வதற்கும் ஊடகங்கள் சொல்வதற் கும் முரண்பாடுகள் இருக்கின்றன. அவ்வாறு முரண் பாடாக இருக்கும்போது யார் கூறுவது சரி எனப் பரிசீலித்து பார்த்துத்தான் சொல்ல முடியும்.

**கேள்வி** - வடக்கு-கிழக்கு இணைப்பில் முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாடு எவ்வாறாக உள்ளது? உங்கள் கட்சி முஸ்லிம் தொடர்பில் எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது?

**பதில்**- வடக்கு – கிழக்கு இணைக்கப்படவேண்டும். முஸ்லிம் மக்களுக்கு முஸ்லிம் அலகொன்று கட்டாயம் கொடுக்கப்பட வேண்டுமென்பது எங்கள் கட்சியின் தீர் மானம். அதற்கு முஸ்லிம் மக்களின் தலைமைத்துவ மும் சிங்கள மக்களின் தலைமைத்துவமும் எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடும்.

ஆனால் பாரம்பரியமாக வடக்கு-கிழக்கு மக்கள் தமிழ் பேசும் மக்களாக இருந்த காரணங்களினால் அவர்களின் பிரச்சினைகளை அவர்கள் தான் தீர்க்க வேண்டும்.

ஆகவே அவர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின் றார்கள் என்று சொல்லிவிட்டு இருக்க முடியாது. கடந்த 50 வருடங்களில் எங்கள் மக்கள் தொகை மாறி விட்டது என்பதற்காக எங்கள் பாரம்பரிய உரித்துக்களை-உரி மைகளை- நாங்கள் விட்டுக் கொடுக்க முடியாது. ஆனால் முஸ்லிம் மக்கள் உண்மையை அறிந்து கொண்டார் க ளானால் நல்லது.

நாங்கள் ஒன்றை நினைவில் வைத்திருக்கவேண் டும். கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் தமிழறிவு விசாலமானது. நன்றாகத் தமிழ் பேசுவார்கள். ஆகவே அவர்கள் தமிழை விட்டுக் கொடுக்கமாட்டார்கள் என நான் நினைக்கின்றேன்.

ஆகவே முஸ்லிம்களும் எங்களுடன் சேர்ந்து வடக்கு- கிழக்கு இணைப்பையும் முஸ்லிம் மக்களுக்கான அல கை யும் பெறுவதைப் பற்றிச் சிந்திப்பார்கள்-ஏற்பார்கள்- என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. எமது கட்சியைப் பொறுத்தவரை வடக்கு-கிழக்கு இணைக்கப்பட வேண் டும். முஸ்லிம்களுக்கு ஓர் அலகு இருக்கவேண்டு மென்பதே நிலைப்பாடாகும்

**கேள்வி**- தமிழ் மக்கள் கூட்டணியில் ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியன இணைந்து கொள்வது தொடர்பில் எவ்வாறான நிலைப் பாடு உள்ளது?

**பதில்**- நாங்கள் இணைந்து செயற்படுவதற்கான பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கொள்கை ரீதியாக நாங்கள் ஒரே விதமாகவே செயற்பட் டுக் கொண்டிருக்கின்றோம். ஆனாலும் அதில் சில தனிப்பட்ட பிரச்சினைகள் உள்ளமையால் தாமதங்கள் காணப்படுகின்றன. அதனை நாங்கள் பேசித் தீர்த்துக் கொள்ளலாமென கருதுகின்றோம்-என்றார்.

(ஐ-07)

# மைத்திரியின் பிலிப்பைன்ஸ் பயணத்தால் அரசின் பணம் பெருமளவில் வீணடிப்பு!

## அமைச்சர் ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 22

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிலிப்பைன்ஸ் பயணம், எந்தத் திட்டமும் இன்றி மேற்கொள்ளப்பட்டது என்றும், இதனால் அரச பணம் விரயம் செய்யப்பட்டுள்ளதாகவும், பொரு ளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது விநி யோக அமைச்சர் ஹர்ஷ டி சில்வா குற்றம்சாட்டி யுள்ளார்.

கடந்த வாரம் ஐந்து நாள்கள் பயணமாக பிலிப்பைன்ஸ்ஸுக்கு சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சனி இரவு நாடு திரும் பினார்.

ஜனாதிபதியின் குழுவில் அரசில் அங்கம் வகிக்கும் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன மாத்திரமே இடம்பெற்றிருந்தார்.

அந்தக் குழுவில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா, லசந்த அழகியவன்ன, நிசாந்த முத்து ஹெட்டிகம, வசந்த பெரேரா, சரத் துஷ்மந்த, அங்கஜன் இராமநாதன் ஆகியோரும் இடம்பெற்றி ருந்தனர்.

இது, அரசியல் மட்டங்களில் கடுமையான விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள பொருளா தார மறுசீரமைப்பு மற்றும் பொது விநியோக அமைச்சர் ஹர்ஷ டி சில்வா,

மோசமாகத் திட்டமிடப்பட்ட அரசுமுறைப் பயணங்களால் பொது நிதி வீணடிக்கப்படுகின்றது. வரி செலுத்துவோரின் பணம், அரசியல்வாதி களின் உதவியாளர்களுக்காக, வீணடிக்கப்படக் கூடாது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிலிப்பைன்ஸ் பயணம், நிச்சயமாக எந்தத் திட் டமிடலும் இன்றியே மேற்கொள்ளப்பட்டது. ஓர் அரச குழுவில், அமைச்சர்களும், அதிகாரிக ளுமே இடம்பெற வேண்டும். எதிர்க்கட்சி உறுப் பினர்களில் ஒருவர் அல்லது இருவர் இடம்பெறுவ தில் தவறில்லை.

ஆனால், அவர்கள் அரசுக்கும் மற் றோர் அரசுக்கும் இடையிலான பேச்சுக்க ளில் பங்கேற்க அதிகாரமில்லை. ஆனால் பிலிப்பைன்ஸ் பயணத்தில் அது தான் நடந்ததைக் கண்டோம்.

இது கேலிக்குரியது. அனைத்து மரபுகளையும் மீறுகின்ற செயல். பொது நிதி வீணடிக்கப்பட்டுள்ளது-என்றார்.

(ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



# ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் பெடரர் அதிர்ச்சித் தோல்வி

மெல்பேர்ன்,ஜன.22

ஆஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் தொடரில் நடைபெற்ற 4வது சுற்றுப் போட்டியில் கிரீஸ் வீரர் டிஸ்டிஸ்பஸிடம் சுவிற்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

ஆஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் தொடர் மெல்போர்னில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 4வது சுற்றுப் போட்டியில் சுவிற்சர்லாந்தை சேர்ந்த ரோஜர் பெடரர் கிரீஸ் நாட்டை சேர்ந்த டிஸ்டிஸ்பசை எதிர்கொண்டார்.

இதில், டிஸ்டிஸ்பஸிடம் ரோஜர் பெடரர் 7 - 6, 6 - 7, 5 - 7, 6 - 7 என்ற செட் கணக்கில் தோற்று தொடரில் இருந்து வெளியேறினார். இந்த வெற்றியின் மூலம் டிஸ்டிஸ்பஸ் காலிறுதி சுற்றுக்குள் நுழைந்தார். இந்த போட்டி சுமார் மூன்றே முக்கால் மணி நேரம் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.





ஜப்னா சுப்பர் லீக் ரி 20 துடுப்பாட்டத் தொடர்

# வேலணை வேங்கைகள், கொக்குவில் ஸ்டார்ஸ்

## பிளே ஓவ் சுற்றுக்கு தகுதி பெற்றன

யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் ஜப்னா சுப்பர் லீக் ரி 20 துடுப்பாட்டத் தொடரில் வேலணை வேங்கைகள் மற்றும் கொக்குவில் ஸ்டார்ஸ் பிளே ஒப் சுற்றுக்கு தகுதி பெற்றன.

இந்த சுப்பர் லீக் ரி 20 தொடரின் மூன்றாவது நாள் ஆட்டங்கள் கடந்த சனிக்கிழமை (19) யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

குழு B இல் நிரலிடப்பட்டுள்ள கொக்குவில் ஸ்டார்ஸ், தெல்லியூர் டைடன்ஸ் அணிகள் தமது இறுதிப் போட்டியில் மோதின. குழு A இல் நிரலிடப்பட்டுள்ள ஜப்னா பந்தேர்ஸ் மற்றும் அரியாலை வோரியர்ஸ் அணிகள் தமது முதலாவது போட்டிகளில் வெற்றியினை பதிவு செய்துள்ளன.

ஜப்னா சுப்பர் லீக்கின் ஐந்தாவது போட்டியாக அமைந்திருந்த இந்த போட்டியில் அரையிறுதி வாய்ப்பு என்ற நிலையில், ஏற்கனவே இடம்பெற்ற இரு போட்டிகளில் ஒரு வெற்றி மற்றும் ஒரு தோல்வியுடன் கொக்குவில் ஸ்டார்ஸ் மற்றும் தெல்லியூர் டைடன்ஸ் அணிகள் பங்கெடுத்திருந்தன.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கொக்குவில் ஸ்டார்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுதாடுவதற்கு களம் நுழைந்த தெல்லியூர் டைடன்ஸ் அணியினர் முதல் பதினொரு ஓவர்களில் வெறுமனே 3 விக்கெட்டுக்களை இழந்து 73 ஓட்டங்களை பெற்றிருந்தனர். துவாரகன், அஜித் மற்றும் பிரதீப் மூவரது விக்கெட்டுக்களும் அடுத்தடுத்து வீழ்த்தப்பட தெல்லியூர் தரப்பினது ஓட்ட வேகம் சடுதியாக சரிந்தது.

19 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்த தெல்லியூர் வீரர்கள் தீர்மானமிக்க போட்டியில் 142 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தனர். ஆரம்ப துடுப்பாட்ட வீரர் துவரகன் 31 ஓட்டங்களையும், துஷியந்தன் மத்திய வரிசையில் 26 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

கொக்குவில் ஸ்டார்ஸ் அணி சார்பாக பந்துவீச்சில் வாமணன் மற்றும் கிருஷ்ணதீபன் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தனர்.

பின்னர் சுஜன், வினோத் பெற்றுக்கொடுத்த இருபதுகளின் துணையுடன் கொக்குவில் வீரர்கள் 77 ஓட்டங்களை பெற்றிருந்தபோதும், அணித்தலைவர் வினோத் உட்பட தெல்லியூர் வீரர்கள் 6 விக்கெட்டுக்களைச் சாய்த்தனர்.

கே.சி.சி.சி அணியின் கேதீஸுடன் இணைந்து 7 ஆவது விக்கெட்டுக்காக 62 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்து போட்டியை ஜொலி ஸ்டார்ஸ் அணி வீரரான வாமணன் தம்பக்கம் மாற்றினார். கேதீஸின் பவுண்டரியுடன் போட்டியில் வெற்றி பெற்ற கொக்குவில் ஸ்டார்ஸ் பிளே ஒவ் (play off) சுற்றுக்குத் தகுதி பெற்றது.

துடுப்பாட்டத்தில் எட்டாவது இலக்கத்தில் நுழைந்து அதிரடி காட்டிய வாமணன் 20 பந்துகளில் 42 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்திருந்தார். கேதீஸ் ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களை பெற்றிருந்தார். தெல்லியூர் டைடன்ஸ் சார்பாக பந்துவீச்சில் கபிலன் 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

ஆட்ட நாயகன் - வாமணன் (கொக்குவில் ஸ்டார்ஸ்)




# டோனிக்கு கௌரவம்

டுபாய்,ஜன.22

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் அபாரமாக ஆடிய டோனியின் படத்தை ஐ.சி.சி. தனது டுவிட்டர் பக்கத்தில் வைத்து கௌரவப்படுத்தி உள்ளது.

ஐ.சி.சி. டுவிட்டர் கவர் பக்கத்தில் வைக்கப்பட்டுள்ள டோனியின் படத்தை அவரது ரசிகர்கள் பதிவேற்றம் செய்து மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். ஐ.சி.சிக்கு தங்களது பாராட்டுகளையும் தெரிவித்துள்ளனர்.

# இந்தியாவுடனான தோல்விக்கு பொறுப்பேற்ற ஆரோன் பிஞ்ச்



மெல்பேர்ன்,ஜன.22

இந்தியாவுடன் ஏற்பட்ட தோல்விக்கு தானே முழுப் பொறுப்பு எனவும் வேறு எவரையும் குறைகூற விரும்பவில்லை எனவும் ஆரோன் பிஞ்ச் கூறியுள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான 3 ஒருநாள் போட்டித்தொடரை ஆஸ்திரேலியா 1-2 என்றகணக்கில் இழந்தது. இந்த தோல்வி குறித்து ஆஸ்திரேலிய ஒருநாள் போட்டி அணித் தலைவர் ஆரோன் பிஞ்ச் கூறியதாவது:-

இந்தியாவுடன் ஏற்பட்ட தோல்விக்கு நானே முழுப் பொறுப்பு. வேறு எவரையும் குறைகூற விரும்பவில்லை. டெஸ்ட், ஒருநாள் தொடரில் எதிர்பார்ப்புக்கு மாறாக ஆடிய எனது செயல்பாடே தோல்விக்கு காரணம். எனது ஆடும் உத்தியில் தவறுகளை களைய வேண்டும். எனது ஆட்டத் திறமையை மேம்படுத்த வேண்டும். அணித்தலைவராக நான் சரியாக விளையாடவில்லை எனத் தெரிவித்தார்.

தொடக்க வீரரான ஆரோன் பிஞ்ச் டெஸ்ட் தொடரில் 96 ஓட்டங்களும், ஒரு நாள் தொடரில் 26 ஓட்டங்களும் மட்டுமே எடுத்திருந்தார்.

# பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ள மிட்செல் ஜோன்ஸன் தெரிவு செய்த உலக கிண்ணத்துக்கான ஆஸி அணி

ஆஸ்திரேலிய அணி உலகக்கோப்பைக்கு எந்த மாதிரி அணியைத் தேர்வு செய்யும் என்ற கணிப்புகளுக்கும் ஹேஷ்யங்களுக்கும் இடையே மிட்செல் ஜோன்சன் தன் உலகக்கோப்பை ஆஸ்ரேலிய அணியை அறிவித்துள்ளார், ஆனால் அந்த அணிக்கு அவர் யார் தலைவராக இருக்க வேண்டும் என்று தேர்வு செய்தது பலரது புருவத்தை உயர்த்தியுள்ளது.

ஸ்டீவ் ஸ்மித், வோர்னர் மீண்டும் அணிக்குத் திரும்பிவிடுவார்கள் என்று ஜோன்சன் அவர்களை அணியில் சேர்த்தாலும் அணிக்குத் தலைவராக கிளென் மேக்ஸ்வெலைத் தேர்வு செய்திருக்கின்றமை பலருக்கும் கடும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் ஜோன்சனின் இந்த அணியில் தற்போதைய டெஸ்ட் துணைத் தலைவர் ஜோஷ் ஹாசில்வுட் இல்லை என்பது பெரிய ஆச்சரியமாக பார்க்கப்படுகிறது. அன்று கிளென் மேக்ஸ்வெல் டோனிக்கு எளிதான பிடியை விட்டது முதல் அவர் மீது ஆஸி. ரசிகர்களுக்கு கடும் கோபம் உள்ள நிலையில் அவரை உலகக் கோப்பை போன்ற பெரிய நிகழ்வுக்கு தலைவராக ஜோன்சன் எப்படித் தேர்வு செய்தார்? என்று ஆஸி. ஊடகங்கள் கேள்வி எழுப்பி வருகின்றன.

**மிட்செல் ஜோன்சனின் ஆஸ்திரேலிய உலகக் கோப்பை அணி:**

கிளென் மேக்ஸ்வெல் (அணித்தலைவர்), கவாஜா (துணைக் கப்டன்), பிஞ்ச், வோர்னர், டார்சி ஷார்ட், ஸ்டீவ் ஸ்மித், ஷோன் மார்ஷ், மார்கஸ் ஸ்டாய்னிஸ், பீட்டர் ஹேண்ட்ஸ்கம்ப் (விக்கெட் கீப்பர்), கம்மின்ஸ், நேதன் கூல்ட்டர் நைல், மிட்செல் ஸ்டார்க், ஜை ரிச்சர்ட்சன், ஆண்ட்ரூ டை, அடம் ஸாம்ப்பா

# நியூஸிலாந்தில் இந்திய அணி



விராட் ஹோக்லி தலைமையிலான இந்திய அணி நியூசிலாந்துக்குச் சென்றுள்ளது.

இந்திய அணி, நியூசிலாந்தில் 5 ஒரு நாள் போட்டி மற்றும் மூன்று ரி 20 போட்டிகளில் பங்கேற்கிறது.

இந்தியா-நியூசிலாந்து மோதும் முதலாவது ஒரு நாள் போட்டி நேப்பியரில் நாளை (புதன்கிழமை) நடக்கிறது. இந்த ஆட்டம் இலங்கை நேரப்படி காலை 7.30 மணிக்கு தொடங்கும்.

இந்தியாவை எதிர்கொள்ள, கனே வில்லியம்சன் தலைமையிலான நியூசிலாந்து, வலுவான அணியாக களம் இறங்குகிறது. ஓய்வு அளிக்கப்பட்டிருந்த டொம் லாதம், கொலின் டி கிராண்ட்ஹோம் மற்றும் காயத்தில் இருந்து மீண்ட மிட்செல் சான்ட்னர் ஆகியோர் அணிக்கு திரும்பியுள்ளனர்.

## புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாகும், 'த மோர்னிங் ஸ்ரார்' நாளிதழ் தெரிவித்துள்ளது.

பிரிட்டன் வெளிவிவகாரப் பணியகம் ஏற்கனவே ஒப்புக்கொண்டதை விட இரண்டுமடங்கு கோப்புகளை, அழித்திருப்பதாக, தகவல் சுதந்திர கோரிக்கை மூலம் 'த மோர்னிங் ஸ்ரார்' கண்டறிந்துள்ளது.

தமிழ்ப் போராளிகளுக்கு எதிராக எப்படி போரிடுவது என்று இலங்கை உளவுப் பிரிவு மற்றும் கொமாண்டோக்களுக்கு, பிரிட்டனின்எம்.ஐ.5 மற்றும், எஸ்.ஏ.எஸ். பிரிவினர் ஆலோசனை வழங்கியது.

தொடர்பாக, 1970களின் பிற்பகுதியில் இருந்து, பேணப்பட்டு வந்த, 195 கோப்புகள் அழிக்கப்பட்டு விட்டதாக, கடந்த ஆண்டு, பிரிட்டன் வெளிவிவகாரப் பணியகம் கூறியிருந்தது.

இந்தநிலையில், 'த மோர்னிங் ஸ்ரார்' தற்போது வெளியிட்டுள்ள அண்மைய அறிக்கையின்படி, 1980களின் தொடக்கத்தில் இருந்து, பேணப்பட்டு வந்த, மேலும் 177 கோப்புகளை இராஜதந்திரிகள் அழித்துள்ளனர் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம், அழிக்கப்பட்ட மொத்தகோப்புகளின்எண்ணிக்கை 372 ஆக அதிகரித்துள்ளது.

அழிக்கப்பட்ட கோப்புகளின் பெயர்கள் மாத்திரமே தப்பியுள்ளன. அவற்றில் பல, ஆயுத விற்பனையுடன் தொடர்புடையவையாகும்.

இதனைக் கண்டித்துள்ள, ஆயுத விற்பனைக்கு எதிராக பரப்புரை அமைப்பு இலங்கையில் இடம்பெற்றபோர்க்குற்றங்களுக்கு உடந்தையாக இருந்தது தொடர்பான கோப்புகளை அழிப்பதற்கு வெளிவிவகாரப் பணியகம் அனுமதிக்கமுடியாதுஎன்று,கூறியுள்ளது.

இலங்கையில் நடந்த மோதல், பேரழிவுவிளைவுகளை ஏற்படுத்தியது, பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர்.

இந்தப் போரில் பிரிட்டனின் பங்கு, அரசுக்குச் சங்கடமாக இருக்கலாம், ஆனால் நீதி மற்றும் பொறுப்புக்கூறல் இருக்க வேண்டும் என்றால் அது முற்றிலும் அம்பலப்படுத்தப்பட்டு புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்று ஆயுத விற்பனைக்கு எதிராக பரப்புரை அமைப்பின் பேச்சாளர் அன்ட்ரூ சிமித், தெரிவித்துள்ளார்.

1980களில் இலங்கையின் வலதுசாரி ஜனாதிபதிக்கு பிரிட்டன் ஆயுதங்களைக் கொடுத்ததுடன், உயர்மட்டத்துக்கு ஆலோசனைகளையும் வழங்கியது.

1984இல், இலங்கை படையினர் தமிழ்ப் பொதுமக்களைப் படுகொலை செய்த சில வாரங்களுக்குப்பின்னர், அந்த நாட்டின் பாதுகாப்புச் செயலர் ஜெனரல் சேபால ஆட்டிக்கல பெல்பாஸ்டுக்கு இரகசியப் பயணம் மேற்கொண்டிருந்தார் என்பதையும், 'த மோர்னிங் ஸ்ரார்' வெளிப்படுத்தியுள்ளது.

இதன்போது, ஜெனரல் ஆட்டிக்கல, றோயல் உல்ஸ்டர் கொன்ஸ்டபுலறி எனப்படும் வட அயர்லாந்தின்பொலிஸ்தலைவருடன்உணவருந்தியதுடன், கிளர்ச்சி முறியடிப்பு உத்திகள் தொடர்பாகவும் கலந்துரையாடியிருந்தார்.

வட அயர்லாந்தின் இராணுவப் பிரச்சினைதொடர்பான இலங்கையின் ஆர்வம் என்ற தலைப்பிடப்பட்ட கோப்பு, வெளிவிவகாரப் பணியகத்தினால் அழிக்கப்பட்டு விட்ட நிலையில், இந்த இரகசிய உறவு தொடர்பான முழு விவரங்களும் தெரியவராது.

வரலாற்று ஆவணங்களை அனைத்து அரசு துறைகளும் பாதுகாக்கவேண்டும். 30 ஆண்டுகளுக்குப்பிறகு, தேசிய ஆவணக் காப்பகத்தில் பொதுமக்களுக்கு அவற்றைக் கிடைக்கச் செய்ய வேண்டும். ஆனால் இந்தக் கோப்புகள் பகிரங்கப்படுத்தப்படுவதற்கு முன்னதாகவே, வெளிவிவகாரப் பணியகம் அவற்றை அழித்திருக்கிறது.

கென்யாவில் காலனித்துவத்துக்கு எதிரான Mau Mau செயற்பாட்டாளர்கள் பிரித்தானியாவினால் துன்புறுத்தப்பட்டமை தொடர்பான கோப்புகள் அழிக்கப்பட்டமைக்காக வரலாற்றாசிரியர்களிடம் பிரிட்டன் வெளிவிவகாரப் பணியகம் மன்னிப்புக் கோரிய சில வாரங்களுக்குப் பின்னர், 2014இல் சிறிலங்கா தொடர்பான கோப்புகள் அழிக்கப்பட்டதாக 'த மோர்னிங் ஸ்ரார்' கண்டறிந்துள்ளது.

1980களின் நடுப்பகுதிக்குப் பின்னரான இலங்கைதொடர்பான 40 க்கும் மேற்பட்ட கோப்புகளை அழிக்க இரகசியத் திட்டங்களை இப்போது இராஜதந்திரிகள் தயாரித்துள்ளனர் என்பதை, எம்மால் வெளிப்படுத்த முடியும்.

இந்தக் கோப்புகள் அரசியல் புகலிட விண்ணப்பங்கள், இலங்கைப் படையினருக்கு பிரிட்டனில் அளிக்கப்பட்ட பயிற்சிகள், மற்றும் ஒன்பது பகுதிகளை உள்ளடக்கிய ஆயுத விற்பனைகள் தொடர்பான விவரங்களைக்கொண்டவையாகும்.

கென்ற் பல்கலைக்கழகத்தின் இலங்கை தொடர்பான நிபுணரான கலாநிதிராச்சேல்சியோசே எஞ்சியுள்ளகோப்புகளைஅரசிடம் இருந்துமீட்கமுயற்சித்துவருகிறார்.

ஆரம்பத்தில் நினைத்ததை விட மிகப்பெரிய அளவில் கோப்புகளைஅழித்தல்நடக்கிறது. அவர்கள்வரலாற்றைசிதைக்கிறார்கள் என்று கலாநிதி ராச்சேல் சியோசே எச்சரித்துள்ளார்.

எஞ்சியுள்ள கோப்புகளை வெளிப்படுத்துமாறு, தாம் விடுத்த தகவல்சுதந்திரக்கோரிக்கைகளை இராஜதந்திரிகள் நிராகரித்துள்ளனர் என்றும், இதனால் தகவல் ஆணையகண்காணிப்புஅமைப்பிடம் மேன்முறையீடு செய்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

போரில் பிரிட்டன் அரசின் பங்கு தொடர்பாக, குறிப்பாக இலங்கைப் படைகளுக்கு ஆயுதமளித்தல் மற்றும் பயிற்சி அளிக்கப்பட்டது குறித்து இன்னும் முழுமையாக அறியப்படவில்லை.

அதனால்தான்அந்தக்காலத்திலிருந்த கோப்புகளை அழிக்க ஆர்வம் காட்டப்படுகிறது. கோப்புகளை அழிப்பதற்கு அவசரப்படுவது சந்தேகத்தையும் கவலையையும் ஏற்படுத்துகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த ஆவணங்களை அழிப்பதன் மூலம் வரலாற்றை திருத்தி எழுத நாம் அனுமதிக்க முடியாது என்றும், கலாநிதி ராச்சேல் சியோசே கூறினார்.

நாளை (இன்று) வரை இதுபற்றிக் கருத்து கூற முடியாது என்று பிரிட்டன் வெளிவிவகாரப் பணியகம் 'த மோர்னிங் ஸ்ரார்' நாளிதழுக்கு தெரிவித்துள்ளது. (ஐ)

## எம்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறவினர்கள் நேற்று முள்ளியவளையில் போராட்டம் நடத்தினர்.

முல்லைத்தீவு – முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் நடந்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முற்பகல் பங்கேற்றார்.

இதன்போது, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பும் வகையிலான வாசகங்கள் எழுதப்பட்ட அட்டைகள், பதாதைகளுடன் கூடி கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாட்டின் ஜனாதிபதியே, எம்மை ஏன் கைவிட்டீர்கள்? என்று பெரிய பதாதை ஒன்றையும் அவர்கள் வைத்திருந்தனர்.

பொலிஸார், போராட்டத்தில் ஈடுபட்டவர்களைத்தடுக்க முயன்றதால் பதற்றம் ஏற்பட்டது.

அதேவேளை, கிளிநொச்சியில் உள்ள யாழ்.பல்கலைக்கழக பொறியியல் பீட வளாகத்தில் மரக்கன்றுகளை நாட்டும் நிகழ்வில் பங்கேற்க வந்த ஜனாதிபதியின் கவனத்தை ஈர்க்கும் வகையில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டம் நடத்த முயன்றனர்.

எனினும், அவர்களைப் பல்கலைக்கழக வளாகப் பகுதிக்குச் செல்ல பொலிஸார் அனுமதிக்கவில்லை. இதனால், ஏ-9 வீதியிலேயே அவர்கள் கவனவீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ஐ)

## 1240 ஏக்கர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1240 ஏக்கர் காணிகள் ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேனவினால், அந்தந்த மாவட்ட செயலர்களிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

முல்லைத்தீவுக்கு நேற்று வருகை தந்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, காணி விடுகைப் பத்திரங்களை மாவட்டச் செயலர்களிடம் கையளித்தார். (ஐ)

## போதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரிபாலசிறிசேனதெரிவித்துள்ளார்.

அதேபோல் போதை வர்த்தகத்தில் ஈடுபட்டவர்களுக்கு மரண தண்டனை வழங்குவதற்கு அரசு எடுத்ததீர்மானமும் எவ்வித மாற்றமுமின்றி முன்னெடுக்கப்படுமென ஜனாதிபதி கூறினார்.

தேசிய போதைப்பொருள் தடுப்பு பாடசாலை வாரத்தை நேற்று முல்லைத்தீவில் ஆரம்பித்து வைத்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் போதைப் பொருளை எதிர்ப்போம் என சத்தியப்பிரமாணம் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன்வெள்ளத்தால்பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கான நிதி உதவிகளும், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் படையினர் வசமிருந்த காணிகளின் ஒரு பகுதியை விடுவிக்கும் பத்திரங்களும் வழங்கப்பட்டன.

அங்கு உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில் –

போதைப் பொருள் ஒழிப்பு சவாலில் வெற்றிப்பெற்றுள்ள பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி முன்னெடுத்தத் தீர்மானங்களை நான் முன்னெடுக்காமைக்குக் காரணம்சில அரசசார்பற்ற நிறுவனங்கள் மீதான பயமல்ல. சட்டவிரோத போதை வர்த்தகர்களுக்கு எதிராக முன்னெடுக்கும் கடும் நடவடிக்கைகளில் எவ்வித மாற்றமுமில்லை – என்றார்.

அத்துடன் போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்கான துரித தொலைபேசி இலக்கம் 1984 ஜனாதிபதியால் அங்குரார்ப்பணம்செய்துவைக்கப்பட்டது

இந்த நிகழ்வில் அமைச்சர்களானதயா கமகே, ரிசாத் பதியுதீன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, சி.சிவமோகன், அங்கஜன் ராமநாதன், காதர் மஸ்தான், தயாசிறி ஜயசேகர, வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன், மாவட்ட அரச அதிபர்கள், அரச திணைக்கள உயர் அதிகாரிகள், இராணுவத் தளபதி, பொலிஸ்மா அதிபர், கடற்படைத் தளபதி, கல்வித்திணைக்கள அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

## தமிழுரைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளருமான நீதியரசர் க.விக்னேஸ்வரன்.

வாரம் ஒரு கேள்வி என்று தலைப்பிட்டு அனுப்பி வைத்த ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கேள்வி: பௌத்தத்துக்கு முதலிடம் கொடுக்கும், ஏக்கிய இராஜ்ஜிய பதம் கொண்ட, வடகிழக்கு இணைப்பற்ற, சமஷ்டி அற்ற, புதிய அரசியல் அமைப்பின் வரைவு பற்றி உங்கள் கருத்தென்ன?

பதில்: அரசமைப்பைத் திருத்துவதற்கு முக்கிய காரணம் தமிழ் மக்களின் பலவருட கால எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதே என்பது எமது எண்ணம். ஆனால் இவ்வருடம் மார்ச் மாதத்திற்கு முன்னர் தமிழர் சம்பந்தமாக நாம் ஏதோ சில நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம் என்று ஜெனீவாவில் எடுத்துக் காட்டி மேலும் தவணை எடுக்கவேண்டியுள்ளது அரசுக்கு.

எமது எதிர்பார்ப்புக்களைப் நிறைவு செய்வது அவர்களின் நோக்கமல்ல. ஜெனீவாப் பிரச்சினையில் இருந்து தப்பிவிட வேண்டும் என்பதே அவர்களின் அதியுச்ச அவாவும் ஆசையும். தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் களைந்து அவர்களை நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார நீரோட்டத்தினுள் அணைத்துச் செல்வது அரசின் நோக்காக இருந்திருந்தால் தொடக்கத்திலேயே தமிழ் மக்கள் ஏன் பௌத்தத்துக்கு முதலிடம் கொடுக்க முன் வருகின்றார்கள் இல்லை, ஏன் ஏக்கிய இராஜ்ஜியவுக்கு அவர்கள் எதிர், ஏன் வடகிழக்கு இணைப்பைக் கேட்கின்றார்கள், ஏன் சமஷ்டி முறையே சிறந்தது என்று கூறுகின்றார்கள் என்பதை அலசி ஆராய்ந்திருப்பார்கள். அது அவர்களின் நோக்கமன்று.

சிங்கள ஏகாதிபத்தியத்தைக் காப்பாற்றி தமிழ் மக்களைத் தொடர்ந்துதமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க என்ன செய்யலாம் என்பதே அவர்கள் குறிக்கோள். புதிய அரசமைப்பு அதற்கான கண்துடைப்பு. அதில் தேர்தல் பற்றி வேறு விடயங்கள் பற்றி வருவது தமிழர்களுக்கு நாம் எதுவும் கொடுக்க இவ்வரைவைக் கொண்டு வரவில்லை என்று சிங்கள மக்களுக்கு கூறுவதற்காகவே.

நாம் கேட்பது கிடைக்காது என்ற சிந்தனையுடனே கூட்டமைப்பு செயற்படுகிறது

நாம் கேட்கும் எதுவும் கிடைக்கப் போவதில்லை என்ற சிந்தனையுடனயே தமிழர்கள் சார்பில் எமது பிரதிநிதிகள் அரசுடன் கருத்துப் பரிமாறி உள்ளார்கள் என்பது போலத் தெரிகின்றது. அதாவது அரசு இந்த அளவு தான் தர முடியும் என்று கூறியதை அதாவது பௌத்தத்திற்கு முதலிடம், ஒற்றையாட்சி, வடகிழக்கு இணைப்பில்லை, சமஷ்டி இல்லை என்பவற்றை வைத்து அவற்றை எப்படித் தமிழ் மக்களிடம் அவர்கள் முகம் சுழிக்காமல் கொண்டு செல்லலாம் என்று சிந்தித்தே நடவடிக்கைகளில் இறங்கி இருக்கின்றார்கள் எங்கள் பிரதிநிதிகள் என்பது கண்கூடு.

சுருக்கமாகக் கூறுவதானால் தரமாட்டோம் என்றவர்களிடம் நீங்கள் தருவதைத் தாருங்கள்; நாங்கள் அதை எமது மக்களிடம் விற்கின்றோம் என்று கூறியே இந்தவரைவைப்பெற்றுள்ளார்கள் எம்மவர்கள் போலத் தெரிகின்றது.

ஏக்கிய இராஜ்ஜிய என்றால் ஒற்றை நாடு. ஏக்கிய இரஜய என்பது ஒற்றையாட்சி. சிங்களத்தில் இராஜ்ஜிய என்பது நாடு என்று தமிழில் பொருள்படும். இரஜய என்பது ஆட்சி என்று தமிழில் பொருள்படும். ஆகவே ஏக்கிய இராஜ்ஜிய என்பது ஒற்றை நாடே ஒழிய ஒருமித்த நாடல்ல. ஆனால்ஒற்றைநாட்டை ஒருமித்த நாடு என்று குறிப்பிட்டு எங்கள் மக்கள் பிரதிநிதிகள் குழப்பத்தை விளைவித்து வருகின்றார்கள். அதாவது ஒற்றை யை ஒருமித்த என்ற விதத்தில் எமக்கு விற்கப் பார்க்கின்றார்கள்!

அரசின் தரப்படுத்தப்பெற்ற சட்டச்சொற்தொகுதியில் ஏக்கிய இராஜ்ஜிய என்றால் ஒற்றையாட்சி அரசு என்று குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது இவ்வாறான ஆட்சியைக் கொண்ட நாடு அல்லது அரசு என்று குறிப்பிட்டுள்ளார்கள் ஆகவே சிங்களத்தில் இராஜ்ஜிய என்றால் தமிழில் அரசு என்று பொருள்படும். அரசு வேறு அரசாங்கம் வேறு. அரசு என்பது நாடு. அரசாங்கம் என்பது ஆட்சி முறை. சிங்களத்தில் இரஜய என்பது தமிழில் ஆட்சி என்று பொருள்படும்.

ஆனால் ஒருமித்த நாடு என்று கூறும் போது பிரிந்திருக்கும் அலகுகளை ஒன்றுபடுத்திய நாடு என்று பொருள்படும். அவ்வாறு ஒன்றுபடுத்தியதை சிங்களத்தில் எக்சத் இராஜ்ஜிய என்பார்கள். ஏக்கிய இராஜ்ஜிய என்று கூறமாட்டார்கள். United Kingdom என்ற சொல்லுக்கு எக்சத் இராஜ்ஜிய என்று சிங்களத்திலும், ஐக்கிய இராஜ்ஜியம் என்று தமிழிலும் மேற்படி சொற்தொகுதியில் குறிப்பிட்டுள்ளார்கள்.

**(மிகுதி நாளை வரும்)**

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொது ஒழுங்குகள் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிமன்றம் இந்தப் பிடியாணை உத்தரவை வழங்கியது.

2018ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தின நிகழ்வு லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் நடத்தப்பட்டது. அதே தினத்தில் இலங் கையின் போர்க்குற்றத்துக்கு எதிராக இலங்கைத் தூதுரகம் முன்பாக ஆர்ப்பாட்டமும் நடந்தது. இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட புலம்பெயர் தமிழர்களை நோக்கி கழுத்தை அறுப்பதுபோன்று சைகையில் எச்சரிக்கை செய்தார் என்ற குற்றச்சாட்டை அடுத்து தூதரகத்தின் அப்போதைய பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ சர்ச்சையில் சிக்கியிருந்தார்.

இந்த நிலையில் இராணுவத் தளபதி, பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோவைச் சிறப்புக் கலந்துரையாடலுக்காகக் கொழும்புக்குத் திருப்பி அழைத்தார். பின்னர் அவரை லண்டன் தூதுரக பாதுகாப்பு ஆலோசகர் பதவியிலிருந்து நீக்கிய இராணுவம், சீனாவுக்கு அனுப்பியிருந்தது.

இதனை அடுத்து பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோவுக்கு எதிராக லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் நீதிவான் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட வழக்கில் அண்மையில் நகர்த்தல் பத்திரம் அணைக்கப்பட்டு விசாரணைக்கு எடுக்கக் கோரப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் நேற்று வழக்கு விசாரணைக்கு வந்தது. இதன்போதே எதிராளிக்குப் பிடியாணை உத்தரவிடப்பட்டது.

நேற்றைய வழக்கு விசாரணையின்போது பிரிகேடியர் பெர்னான்டோவோ அல்லது இலங்கைத்தூதரகத்தில் இருந்தோ எவரும் நீதிமன்றில் முன்னிலையாகியிருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வடக்குப் பாடசாலைகளின் தேவைகளை மாணவர்களிடம் கேட்டறிந்தார் ஜனாதிபதி





கிளிநொச்சி, ஜன. 22

கிளிநொச்சியில் மரநடுகை நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாடசாலைகளின் தேவைகள் குறித்து மாணவர்களிடம் கேட்டறிந்தார்.

கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெற்ற மர நடுகை நிழ்வில் ஜனாதிபதி நேற்றுக் கலந்துகொண்டார்.

ஜனாதிபதியுடன் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு மரக் கன்றுகளை நாட்டி வைத்தனர்.

இதன்போது ஆயிரத்து 500 மரக்கன்றுகள் அந்த வளாகத்தில் நாட்டப்பட்டன. பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வின்போது ஜனாதிபதி பொதுமக்கள் மற்றும் மாணவர்களுடன் சகஜமாகக் கலந்துரையாடியதுடன், பாடசாலைகளின் தேவைகள் குறித்தும் மாணவர்களிடம் கேட்டறிந்தார். (ஐ)

## ஊடகவியலாளர் கடத்தல்; டி.ஐ.ஜியிடம் வாக்குமூலம்

கொழும்பு, ஜன. 22

ஊடகவியலாளர் போத்தல ஜயந்த கடத்தப்பட்டுச் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேல் மாகாண வடக்குக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் தென்னக் கோனிடம் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

போத்தல ஜயந்த கடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் தென்னக்கோன் நுகேகொடைப் பிரிவுக்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றியுள்ளார்.

ஊடகவியலாளர் போத்தல ஜயந்த 2009ஆம் ஆண்டு ஜூன் மாதம் எம்பில்தெனிய பிரதேசத்தில் வைத்து வெள்ளைவான் ஒன்றில் கடத்திச் செல்லப்பட்டு, சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு வீதியில் வீசிச் செல்லப்பட்டிருந்தார்.

இவர் கடத்தப்பட்டு கடும் சித்திரவதைகளுக்கு உள்ளானமை தொடர்பில் மிரிஹான பொலிஸார் இந்த விடயத்துடன் சம்பந்தம் இல்லாத இருவரைக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர் எனவும், இதன்போது பிரதிப் பொலிஸ்மா அதிபர் தென்னக்கோன் நுகேகொடைப் பிரிவுக்கு பொறுப்பாக இருந்தமையால், இந்த கைது தொடர்பில் இவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பில் 2017ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20ஆம் திகதி போத்தல ஜயந்த குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் செய்த முறைபாட்டுக்கு அமைய, குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அரசில் பங்கேற்பது எமது நோக்கமல்ல

கூறுகின்றார் சிவமோகன் எம்.பி.



முல்லைத்தீவு, ஜன. 22

தமிழ்மக்களின் உரிமைகளுக்காகப் போராடிவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அரசில் பங்கெடுப்பது தற்கும் நோக்கமில்லை என அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

உருகுலைந்து காணப்பட்ட அரசைஸ்திரப்படுத்தி, ஒரு ஒழுங்கான அரசாக மாற்றியது கூட்டமைப்பு என்றால் அது மிகையாகாது. அதற்காக அரசில் பங்கெடுப்பது எமது நோக்கமல்ல.

ஆனால், கூட்டமைப்பின் இந்தநியாயமானநிலைப்பாட்டை உருக் குலைத்து தமிழ் மக்கள் மத்தியில் பிரி வினைகளை ஏற்படுத்துவதற்கான சூழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன - என்றார். (ஐ)

## இந்திய மீனவர்கள் 11 பேர் எச்சரிக்கையுடன் விடுதலை

கிளிநொச்சி, ஜன. 22

எச்சரிக்கையை மீறி மீண்டும் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டால் ஈராண்டு கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்ற கடும் நிபந்தனையுடன் இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி, பூநகரி கிராஞ்சி கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த 11 இந்திய மீனவர்களே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த 11 பேரையும் கடும் நிபந்தனைகளுடன் விடுதலை செய்வதாக கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

அத்துடன், விசைப்படகின் உரிமையாளர் எதிர்வரும் மார்ச் மாதம் உரிய ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் படகு அரசுடமையாக்கப்படும் எனவும் நீதிபதி கூறினார். பூநகரி கிராஞ்சி கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 11 இந்திய மீனவர்கள் கடந்த 13ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். கிளிநொச்சி நீரியல் வளத் திணைக்களத்தினிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட மீனவர்கள் நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)


## கச்சதீவு திருவிழா குறித்து ஏற்பாட்டுக் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஜன. 22

வரலாற்றுப் புகழ்பெற்ற கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா தொடர்பான முக்கிய கலந்துரையாடல் யாழ்.மாவட்ட செயலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

கச்சதீவு திருவிழா எதிர்வரும் மார்ச் மாதம் 15ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

திருவிழாவுக்கான ஏற்பாடுகள் குறித்து இன்று பிற்பகல் 2 மணிக்கு கலந்துரையாடவுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் அறிவித்தார்.



கச்சதீவு புனித அந்தோனியார்ஆலய வருடாந்த திருவிழாவில் இந்திய மற்றும் இலங்கை பக்தர்கள் பெருமளவானோர் கலந்துகொள்வர்.

அந்தவகையில், பக்தர்களுக்குரிய உணவு, தங்குமிடம் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு ஏற்பா டுகளை முன்னெடுக்கும் பொருட்டு இந்த கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில், கச்சதீவு ஆலய பங்குத்தந்தை, நெடுந்தீவு பிரதேச செயலாளர், போக்குவரத்து ஏற்பாட்டாளர்கள், முப்படையினர், பொலிஸ் மற்றும் ஏனைய அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

## சந்திரிகா செல்லாக் காசு

எஸ்.எம்.சந்திரசேன சீற்றம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எவரும், இனியொரு போதும், அரசோடு இணையமாட்டார்களெனத் தெரிவித்த அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன, தற்போது செல்லாக் காசாகியுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை, ஐக்கிய தேசியக் கட்சியினர் ஒருபோதும் இணைத்துக்கொள்ளமாட்டார்களென்றும் கூறினார்.

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமைச்சரவை தற்போது பூர்த்தியாகியுள்ள நிலையில், எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும், இனி, அரசோடு இணையப் போவதில்லை. அமைச்சுப் பதவியொன்று கிடைக்காமல் எவரும் அரசோடு இணைத் தயாரில்லை-என்றார். (ஐ)

# மஹிந்தவின் ஆதரவுடனேயே புதிய அரசமைப்பு வேண்டும்

## மேல்மாகாண ஆளுநர் வலியுறுத்தல்

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினரின் ஆதரவுடனேயே புதிய அரசமைப்பைக் கொண்டுவர வேண்டுமென மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் சில கருத்துக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பின்னடைவை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

கண்டியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களை சந்தித்து கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

.அவர் மேலும் தெரிவிக்கையில்–

புதிய அரசமைப்பைக் கொண்டுவர வேண்டுமென்றால், ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய அரசு வந்த பின்னரே அதனை மேற்கொள்ள வேண்டும். தற்போது தேர்தல் நெருங்கும் இந்தக் காலத்தில், அவசர அவசரமாக இதனைக் கொண்டுவருவது, அனைத்துத் தரப்பினருக்கும் பிரச்சினையாகவே உள்ளது.

எமது நாட்டைப் பொறுத்தவரை யாரும் நல்லது செய்யவேண்டுமென நினைப்பதில்லை. சிறந்த திட்டமொன்றைக் கொண்டுவந்தால்கூட அதனை எதிர்ப்பதே வழக்கமாக இருக்கிறது.

இதனாலேயே அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து புதிய அரசமைப்பைக் கொண்டுவரவேண்டுமென நாம் கோரி வருகிறோம். நாடாளுமன்றிலுள்ள அனைத்துக் கட்சிகளையும் அரவணைத்துக் கொண்டு இந்தச் செயற்றிட்டத்தை மேற்கொண்டால் மட்டுமே இதில் வெற்றியடைய முடியும்.



மறுபுறத்தில், தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் வெளியிடும் கருத்துக்கள், ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் என்பதையும் கூறியே ஆகவேண்டும். தமது அனுமதியின்றி அரசினால் அல்லது அமைச்சரவையினால் செயற்பட முடியாது என அவர்கள் கூறிவருகிறார்கள். இதுகூட அரசுக்கான அச்சுறுத்தலாகவே அமைந்துள்ளது.

இவற்றை விடுத்து, மஹிந்த உள்ளிட்ட தரப்பினரையும் இணைத்துக்கொண்டு, மகாநாயக்க தேரர்களின் ஆசீர்வாதத்துடன் புதிய அரசமைப்பைக் கொண்டு வரும் பணியில் ஈடுபட வேண்டும். ஆனால் அந்த நிலைமை தற்போது இல்லாமல் உள்ளது–என்றார். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.01.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.